## வேளாண்மை

### தேயிலை


தேயிலை உற்பத்தி 1985 இல் 3 சதவீதத்தினுல் அதிகரித்தது. 1985 இன் 61 இலட்சம் கிலோக்கிரும்கள் கொண்ட இவ்வுற்பத்தி அதிகரிப்பு 1984 இன் 287 இலட்சம் கிலோக்கிரும்களைக் கொண்ட கணிசமான அதிகரிப்பினைத் தொடர்ந்து ஏற்பட்டதாகும். தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகளில் உற்பத்தியில் ஏற்பட்ட அவ்வதிகரிப்புக்களின் விளைவாக 1985 இல் 1971 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மிக உயர்ந்த மட்டமாக விளங்கும் 2,141 இலட்சம் கிலோக்கிரும்கள் கொண்ட உற்பத்தி காணப்பட்டது.

1985 இல் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குச் சாதகமான வானிலை நிலைமைகளினதும் அதிகரித்த வளமாக்கிப் பாவனையினதும் இணைந்த பயனே முக்கிய காரணமாகும். இவ்வதிகரிப்பு மொத்த உற்பத்தி அதிகரிப்பில் ஏறத்தாழ 60 இலட்சம் கிலோக்கிரும்களை அல்லது 98 சதவீதத்தினைக் கொண்டிருந்த தாழ்நிலத் தேயிலைக்கே பெருமளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. மத்திய நிலத் தேயிலை உற்பத்தி 6 இலட்சம் கிலோக்கிரும்களால் அல்லது 1 சதவீதத்தால் மட்டும் அதிகரித்த வேளையில் உயர்நிலத் தேயிலை உற்பத்தி 5 இலட்சம் கிலோக் கிரும்களால் அல்லது 0.6 சதவீதத்தினுல் மிகச் சிறிதளவாக வீழ்ச்சியடைந்தது.

இவ்வாண்டின் தேயிலை உற்பத்தியின் மிகக் குறிப்பிடத்தக்க பண்பு யாதெனில் இலங்கைத் தேயிலை உற்பத்தியின் வரலாற்றில் முதற்றடவையாகத் தாழ்நில வளர் தேயிலை மொத்தத் தேயிலை வெளியீட்டில் உயர்ந்தளவு பங்கினைக் கொண்டிருந்தமையேயாகும். தாழ்நிலப் பகுதிகளின் உயர்ந்த உற்பத்திப் பயிர்ச் செய்கையின் கீழான பரப்பளவு அதிகரித்தமையின் மூலமும் இப்பகுதிகளிலுள்ள சிறு உடமையாளர்களினுல் மேற்கொள்ளப்பட்ட அதிகரித்த வளமாக்கிப் பயன் பாடு உட்படச் சிறந்த பயிர்ச்செய்கை நடைமுறையினூடாக அடையப்பட்ட உயர்ந்த விளைவுகளின் மூலமும் பெறப்பட்டது. கடந்த ஆண்டு முழுவதிலும் இவ்வாண்டின் தொடக்கப் பகுதியிலும் நிலவிய மிக உயர்ந்த தேயிலை விலை களினுல் இம்முன்னேற்றங்களை அடைய முடிந்தது. வாங்கப்பட்ட தேயிலையி லிருந்து தயாரிக்கப்பட்ட தேயிலை நீங்கலாக மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் தேயிலை உற்பத்தி முன்னைய ஆண்டினைவிட 11 இலட்சம் கிலோக் கிரும்களால் அல்லது 2 சதவீதத்தினுல் சிறிதளவில் வீழ்ச்சியடைந்த வேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தேயிலை உற்பத்தி 30 இலட்சம் கிலோக்கிரும்களால் அல்லது 5 சதவீதத்தினுல் சிறிதளவாக உயர் வடைந்தது.

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் தொழிற்சாலைகளின் மொத்த உற்பத்தியில் சார்புரீதியில் குறைந்தளவு கூறினைக் கொண்ட வாங்கப்பட்ட தேயிலையின் உற்பத்தி கடந்த ஆண்டினைதைப் போன்று கூடிக் குறையாமல் நிலையாக இருந்தவேளையில் சார்புரீதியில் உயர்ந்த கூறினைக் கொண்டுள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் வாங்கப்பட்ட தேயிலை 1984 இன் மட்டத்திலிருந்தும் 19 இலட்சம் கிலோக்கிரும்களால் அல்லது 12 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

## முதன்மை வேளாண்மைப் பயிர்களின் உற்பத்தி



தனியாருக்குச் சொந்தமான தொழிற்சாலைகளின் தேயிலை உற்பத்தி கடந்த ஆண்டில் அடையப்பட்ட உற்பத்தி மட்டங்களிலும்விட 63 இலட்சம் கிலோக் கிறாம்களால் அல்லது 13 சதவீதத்தினால் உயர்வடைந்தது. தனியார் பெருந் தோட்டங்களில் உற்பத்தி செய்யப்பட்டு அரசதுறைத் தொழிற்சாலைகளில் பதனிடப்பட்ட எல்லாப் பச்சைத் தேயிலைகளும் தனியார்துறை உற்பத்தியின் கீழ் உள்ளடக்கப்படின் மொத்தத் தேயிலை உற்பத்தியில் தனியார் பெருந்தோட்டங்களின் பங்கு 1984 இன் 37 சதவீதத்திலிருந்து 1985 இல் 38 சதவீதத்திற்கு உயர்ந்திருக்கும். தனியார்துறைத் தேயிலை உற்பத்தியின் அதிகரிப்பு, சிறு உடைமையாளர்களை முனைப்பாகக் கொண்ட தாழ்நிலப் பிரதேசத்தின் அதிகரிப்புக்களுடன் பெருமளவிற்கு இணைந்ததாக இருந்தது.

தேயிலைத் துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வழங்கலினும்விட 12,700 மெற்றிக் தொன்களால் அல்லது 9 சதவீதத்தினால் சிறிதளவாக அதிகரித்தது. கடந்த ஆண்டினைப் போலன்றி வளமாக்கி வழங்கல்களில் காணப்பட்ட மிகச் சிறிய அதிகரிப்பு ஆண்டு முழுவதும் ஒரே சீரான முறையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. சாதகமான வானிலை நிலைமைகள், ஆண்டின் தொடக்கப் பகுதியில் பெறப்பட்ட சார்புரீதியில் சிறந்த விலைகள் ஆகியவற்றின் இணைந்த தாக்கம் இவ்வதிகரிப்பில் குறிப்பிடத்தக்களவிற்குச் செல்வாக்கினைச் செலுத்தியிருக்கலாம். இவ்வதிகரிப்பில் பெரும் பங்கு தனியார்துறைப் பெருந்தோட்டங்களிலேயே ஏற்பட்டதைக் கிடைக்கத்தக்க தரவுகள் எடுத்துக் காட்டின.

அட்டவணை 1.7

## தேயிலைத்துறையின் புள்ளி விபரங்கள் 1983 - 1985

| விடயம் | அலகு | 1983 | 1984(அ) | 1985 (ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி ... | ப. இ. கி. கிறாம்கள் | 179.3 | 208.0 | 214.1 |
| 1.1 உயர் நிலம் ... | ,, | 67.8 | 79.3 | 78.8 |
| 1.2 மத்திய நிலம் ... | ,, | 48.4 | 54.6 | 55.2 |
| 1.3 தாழ் நிலம் ... | ,, | 63.1 | 74.1 | 80.1 |
| 2. தேயிலை பயிரிடப்பட்ட பரப்பளவு ... | '000 எக்டேயர்கள் | 230 | 228 | 231 |
| 3. வளமாக்கி வழங்கல்கள் ... | '000 மெ. தொ. | 115.5 | 137.2 | 149.9 |
| 4. மீளப் பயிரிடல் ... | எக்டேயர்கள் | 1,367 | வி.கி. | வி.கி. |
| 5. விலைகள் | | 36.96 | 46.45 | 35.00 |
| 5.1 கொழும்பு தேறிய ... | ரூபா / கி.கி. | 52.52 | 77.20 | 60.31 |
| 5.2 ஏற்றுமதி க. ஏ. பெ. ... | ,, | 26.37 | 34.00 | 35.00 |
| 6. உற்பத்திக்கான செலவு ... | ,, | 157.8 | 204.0 | 198.0 |
| 7. ஏற்றுமதிகள் ... | ப. இ. கி. கிறாம்கள் | 8,295.0 | 15,764.0 | 12,002.8 |
| 8. ஏற்றுமதி வருவாய்கள் ... | ரூ. ப. இ. | (330) | (605) | (434) |
| 9. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (இ) ... | (சிஎஉ. ப. இ.) | 5.0 | 7.4 | 5.6 |

மூலங்கள் : இலங்கைத் தேயிலைச் சபை
தேசிய வளமாக்கிச் செயலகம்
இலங்கை மத்திய வங்கி.

அ. திருத்தப்பட்டது.
ஆ. தற்காலிகமானவை.
இ. பயிரிடலும் பதனிடலும் மட்டும்.

குறிப்பு : எக்டேயர் ஒன்றுக்கான சராசரி விளைச்சலின் தரவு கிடைக்கவில்லை.

தேயிலைப் பயிர்ச்செய்கையின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பு 1985 இல் 3,650 எக்டேயர்களினால் சிறிதளவாக அதிகரித்திருக்கிறது என மதிப்பிடப் பட்டுள்ளது. இதற்குப் புதிய பயிர்ச்செய்கையின் கீழான நிலப்பரப்புக் குறிப்பாக கடந்த ஆண்டின் மிக உயர்ந்த தேயிலை விலைகளின் நேரடி விளைவாகத் தாழ்நிலப் பிரதேசங்களில் அதிகரித்தமையே பெருமளவு காரணமாகும். மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பெருந்தோட்டங்களின் கீழான நிலப்பரப்பு 1984 இன் 56,744 எக்டேயர்களிலிருந்து 1985 இல் 56,344 எக்டேயர்களுக்கு சிறிதளவாக வீழ்ச்சியடைந்தவேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டங்கள் 1984 இன் 54,454 எக்டேயர்களிலிருந்து 1985 இல் 52,629 எக்டேயர்களுக்கு 3 சதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1985 ஆம் ஆண்டுப் பகுதியில் மீள்நடுகை செய்யப்பட்ட முழு நிலப்பரப்பின் மீதான தரவுகள் இன்னமும் கிடைக்கவில்லையெனினும் கிடைக்கத்தக்கதாகவுள்ள தகவல்களின்படி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினது மீள்நடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பு 7 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனத்தினது மீள்நடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பு 4 சதவீதத்தினாலும் வீழ்ச்சி யடைந்தது. இவ்வாண்டுக் காலப் பகுதியில் தேயிலை விலைகள் நிலையாக வீழ்ச்சி யடைந்தமையின் விளைவாக இவ்விரு கூட்டுத்தாபனங்களினதும் நிதி நிலைமை மோசமடைந்தமை தொடர்புபட்ட செலவுகள்மற்றும் வருவாயற்ற தன்மை ஆகிய நியதிகளில் கடுமையான செலவினைக் கொண்ட நடவடிக்கையான மீள் நடுகையைப் பொறுப்பேற்பதில் இக்கூட்டுத்தாபனங்களை நாட்டமிழக்கச் செய்தன.

கடந்த ஆண்டில் அரசதுறைப் பெருந்தோட்டங்களுக்கான பல்வேறு பயி ரிடல் உதவு தொகைகள் புறக்கீடு செய்யப்பட்டதன் பின்னர் தனியார்துறை அத்தகைய உதவுதொகைகளின் ஒரேயொரு நன்மை பெறுநராக மாறியது. புதிய நிலங்களில் தேயிலையைப் புதிதாகப் பயிரிடுவதற்குச் செலுத்தப்பட்ட உதவு தொகை 1985 யூன் 12 ஆம் நாளன்று அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட முடிவின் நியதிகளின்படி 1985 சனவரி 1 ஆம் நாளிலிருந்தும் கடந்த காலத்தையும் உள்ளடக்கத்தக்க பின்னோக்கிய முறையில் எக்டேயரொன்றிற்கு ரூ. 11,737 இலிருந்து எக்டேயரொன்றிற்கு ரூ. 25,000 இற்கு அதிகரிக்கப்பட்டது.

தயாரிக்கப்பட்ட தேயிலையின் கிலோக்கிராமொன்றிற்கான சராசரி உற்பத் திச் செலவு ஏறத்தாழ ரூ. 35 என மதிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த ஆண் டிலும் பார்க்கச் சிறிதளவு உயர்வானதாகும். சராசரி ஏற்றுமதி விலை (க.ஏ.பெ.) 1984 இன் ரூ. 77.20 இலிருந்து 1985 இல் ரூ. 60.31 இற்கு 22 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இப்போக்கினைத் தொடர்ந்து சராசரி தேறிய விற்பனை 24 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையின் விளைவாகச் சராசரி உற்பத்தியாளர் இலாபம் கடந்த ஆண்டின் கிலோகிராம் ஒன்றிற்கு ரூ. 12.45 இலிருந்து 1985 இல் கிலோகிராமொன்றிற்கு ரூ. 0.39 இற்கு 97 சதவீதத்தினால் வீழ்ச்சி யடைந்திருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. அரசதுறைப் பெருந்தோட்டங்களில் சராசரி உற்பத்தியாளர் இலாபங்கள் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் கிலோகிராமொன்றிற்கு ரூ. 3.11 கொண்ட எதிர்க்கணிய உற்பத்தியாளர் இலாபங்களிலிருந்து அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கிலோகிராமொன் றிற்கு ரூ. 0.17 சதம் கொண்ட நேர்க்கணிய உற்பத்தியாளர் இலாபம் வரையில் வேறுபட்டிருந்தது.

கடந்த ஆண்டு முழுவதிலும் நிலவிய தேயிலைக்கான மிக உயர்ந்த விலைகள் 1985 இன் நடுப்பகுதியில் முடிவுற்றன. முதன்மைத் தேயிலை உற்பத்தி நாடுகளின் உயர்ந்த பயிர் உற்பத்தி, வெட்டப்பட்டு, உடைக்கப்பட்டு, சுருட்டப்பட்ட இந்தியத் தேயிலை ஏற்றுமதிமீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை ஆகியவற்றின் இணைந்த விளைவாகத் தேயிலையின் உலக நிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பு விலைகளின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. தனியார்துறைச் சிறு உடமையாளர்கள் கூடப் பச்சைத் தேயிலையின் விலைகளிலிருந்தான குறைந்த வருவாய்களின் காரணமாக விலை வீழ்ச்சிகளின் அதிர்ச்சியினை உணரத் தொடங்கியுள்ளனர். இச்சூழ்நிலை அவர்களையும் பயிர்ச்செய்கை நடைமுறைகளை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கும்போல் தோன்றுகிறது. இவ்வாறிருப்பினும் தேயிலை விலைகளின் உயர்ந்தளவு தளம்பலுறும் தன்மையினைக் கருத்திற் கொள்ளுமிடத்து உற்பத்தி அதிகரிப்புக்களில் குறிப்பாக அரசதுறைப் பெருந்தோட்டங்களின் கூலி உற்பத்திகளின் மீது கூடியளவு கவனம் செலுத்துவது தவிர்க்கமுடியாத ஒன்றாக மாறியுள்ளது. காலத்திற்குக் காலம் வழங்கப்பட்ட கூலி அதிகரிப்புக்களைத் தொடர்ந்து அவற்றின் செலவினத்தில் பெரும் பங்கிற்குக் கூலிச்செலவு வகை கூறியதுடன் இந்நிறுவனங்கள் அவற்றின் தொழிற்பாடுகளை ஆற்றல் மிக்கதாக்க வேண்டுமாயின் கூலியின் உள்ளீடு ஒன்றிற்கான வெளியீட்டில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களை ஏற்படுத்த வேண்டும். நாடு முழுவதற்குமான எக்டேயர் ஒன்றிற்கான சராசரி விளைவு மீதான தரவுகள் கிடைக்கத்தக்கனவாகவில்லை. எனினும் அரசதுறைக் கூட்டுத்தாபனங்களில் வழங்கப்பட்ட தரவுகளின்படி மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் எக்டேயர் ஒன்றிற்கான சராசரி விளைவு சிறிதளவாக வீழ்ச்சியடைந்தவேளையில், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் எக்டேயர் ஒன்றிற்கான சராசரி விளைவு முன்னைய ஆண்டில் பெறப்பட்ட விளைவு மட்டத்தினைவிட 6 சதவீதத்தினால் அதிகரித்தது. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் உற்பத்தியில் ஏற்பட்ட சிறிதளவு விழ்ச்சிக்கு வளமாக்கிப் பாவனையில் அவதானிக்கப்பட்ட சிறிதளவு குறைப்பே முக்கிய காரணமாக இருந்தவேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் அதிகரித்த உற்பத்திக்கு அதிகரித்த வளமாக்கிப் பாவனை சாதகமான வானிலை நிலைமைகளும் முக்கிய உதவு காரணிகளாகவிருந்திருக்கலாம்.

தேயிலை சிறு உடமைகள் அபிவிருத்தி மேலாண்மைச் சபையினால் தொழிற்படுத்தப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 14 இலிருந்து ஆண்டு இறுதியில் 12 இற்கு வீழ்ச்சியடைந்தது. இத்தொழிற்சாலைகள் கொள்வனவு செய்யப்பட்ட 195 இலட்சம் கிலோக்கிராம்கள் பச்சைத் தேயிலையிலிருந்து 43 இலட்சம் கிலோக்கிராம் தயாரிக்கப்பட்ட தேயிலையை உற்பத்தி செய்தன. இவ்வாண்டுக்காலத்தில் தேயிலை சிறு உடமைகள் அபிவிருத்தி மேலாண்மைச் சபையின் தொழிற்பாடுகள் மீது பல முக்கிய கொள்கை மாற்றங்களின் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இதுவரை தேயிலைச் சபையின் தேயிலை ஆணையாளர் பிரிவினால் தொழிற்படுத்தப்பட்டுவந்த தேயிலைப் பயிரிடுகை உதவுதொகைத் திட்டங்களின் நிருவாகம் தனியார்துறைப் பெருந்தோட்டங்களின் இறப்பர் நிலங்களில் தேயிலை பயிரிடுதல் ஆகியன தேயிலை சிறு உடமை அபிவிருத்தி மேலாண்மைச் சபையிடம் கையளிக்கப்பட்டன. மேலும் மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களிலுள்ள ஏறத்தாழ 22,000 தேயிலை சிறு உடமையாளர்களின் நலன்களைக் கவனிக்கும் நோக்குடன் மாத்தறையில் தேயிலை சிறு உடமை அபிவிருத்தி மேலாண்மைச் சபையின் பிரிவு அலுவலகம் ஒன்று நிறுவப்பட்டது. இவ்வாண்டுக் காலத்தில் மீள்நடுகை செய்வதற்கு 414 எக்டேயர்களுக்கும், புதிதாகப் பயிரிடலுக்காக 599 எக்டேயர்களுக்கும் இறப்பர் நிலங்களில் தேயிலை பயிரிடுதலுக்காக 100

எக்டேயர்களுக்கும் உதவு தொகைகளை வழங்கியிருக்கிறது. தேயிலை விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாகப் பச்சைத் தேயிலைக்குத் தேயிலை சிறுஉடமைகள் மேலாண்மைச் சபையினல் செலுத்தப்பட்ட கிலோவொன்றிற்கான சராசரி விலை முன்னைய ஆண்டின் ரூ. 6.62 தொடக்கம் ரூ. 8.46 வரையான அளவிற்கு எதிராக 1985 இல் ரூ. 4.46 தொடக்கம் ரூ. 6.08 வரையானஅளவுகளுக்கு வேறுபட்டு விளங்கியது.

தேயிலை விலைகளில் நிலையான வீழ்ச்சியினை எதிர்நோக்கிய தேயிலை உற்பத்தியாளர்களுக்கு உடனடியான நிவாரண வழிமுறைகளை அளிக்கும் பொருட்டு வரவு செலவுத் திட்டத்தில் ஏற்றுமதித் தீர்வையில் குறைப்பொன்று அறிவிக்கப் பட்டது. தொகை வடிவிலான தேயிலை, பச்சைத் தேயிலை, உறைகளிலடைக்கப் பட்ட தேயிலை, உடன் தேயிலை ஆகியவற்றின் மீதான ஏற்றுமதித் தீர்வைகள் கிலோக்கிருமொன்றிற்கு ரூ. 2.00 இனுலும் தேயிலைப் பைகளுக்குக் கிலோக் கிருமொன்றிற்கு ரூ. 1.00 இனுலும் குறைக்கப்பட்டன. இவ்வீதங்கள் 1985 நவெம்பர் 14 ஆம் நாளிலிருந்தும் பொருந்தத்தக்கதாகும். மேலுமொரு நிவாரண வழிமுறையாகப் பெறுமான விகித விற்பனை வரியின் தொடக்க விலை 1985 நவெம்பர் 1 ஆம் நாளிலிருந்தும் கிலோக்கிருமொன்றிற்கு ரூ. 32 இலிருந்து ரூ. 40 இற்கு அதிகரிக்கப்பட்டது. வரி வீதம் 50 சதவீதத்தில் நிலையாக விளங்கியது.

தேயிலை விலைகள் தற்போதைய மட்டத்தில் தாழ்ந்தேயிருக்குமானல் இரண்டு அரசதுறைக் கூட்டுத்தாபனங்களும் நடுத்தரகால முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கான தமது சொந்த நிதியை உருவாக்கமுடியாத நிலையிலேயே இருக்கும். ஆகவே இவ்விரண்டு அரச துறைக் கூட்டுத்தாபனங்களினுலும் கூட உதவப்பட்ட தீர்வை நிதியத்திலிருந்தும் உதவுதொகைகளை மீண்டும் அளிப்பது பற்றி ஆலோசிப்பது பயன்மிக்கதொரு விடயமாக இருக்கும்.

தேயிலைத் தயாரிப்பாளர்களினல் எதிர்நோக்கப்பட்ட உயர்ந்து செல்லும் செலவுகளைக் கருத்திற் கொண்டு தயாரிப்பாளர்களினல் கொள்வனவு செய்யப் பட்ட பச்சைத் தேயிலைக்கு அவர்களால் கொடுபடத்தக்க விலைகளைக் கணிப் பதற்குப் பயன்படுத்தப்பட்ட முறை திருத்தப்பட்டது. இதன்படி பச்சைத் தேயிலை வழங்குநர்களினல் பெறப்பட்ட பங்கு ஒரு கிலோ தேயிலையின் மாதாந்த தேறிய விற்பனைச் சராசரி விலையின் 75 சதவீதத்திலிருந்து 70 சதவீதத்திற்குக் குறைக்கப் பட்டது. பெருமளவிற்குத் தேயிலை கொய்யும் மாதங்களில் குறிப்பிட்ட செயல் விளைவு விகிதங்களைப் பேணுவதில் பெரும்பாலான தொழிற்சாலைகள் இடர்ப்பாடு களை எதிர் கொண்டமையினல் பச்சைத் தேயிலைக்குச் செலுத்தும் விலைகளைக் கணிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பயன் விளைவு விகிதமும் 1985 செத்தெம்பர் 1 ஆம் நாளிலிருந்தும் திருத்தப்பட்டது. இத்திருத்தத்தின் நியதிகளின்படி ஏப்பிற லிலிருந்து யூன் வரை, செத்தெம்பரிலிருந்து திசெம்பர் வரையான காலப்பகுதியில் 4.5 கிலோக்கிரும் பச்சைத் தேயிலைக்கு 1 கிலோக்கிரும் தயாரிக்கப்பட்ட தேயிலை என்ற ஒருமுகப்படுத்தப்பட்ட செயல் விளைவு விகிதத்திற்குப் பதிலாக 4.65 கிலோக்கிரும் பச்சைத் தேயிலைக்கு 1 கிலோக்கிரும் தயாரிக்கப்பட்ட தேயிலை என்ற செயல் விளைவு விகிதம் பொருந்தத்தக்கதாக இருக்கும். எஞ்சிய மாதங் களுக்கு 4.5 கிலோக்கிருமினைக் கொண்ட செயல் விளைவு வீதம் தொடர்ந்தும் பொருந்தத்தக்கதாகவிருக்கும்.

மீளாய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் பல முக்கிய நிறுவன ரீதியான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. 1985 இன் எண் 17 கொண்ட இலங்கைத் தேயிலைச் சபையின் (திருத்தச்) சட்டத்தின் மூலம் இலங்கைத் தேயிலைச் சபையின் அங்கத்துவம் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், தேயிலை சிறு உடமை அபிவிருந்தி மேலாண்மைச் சபை போன்ற உற்பத்தியாளர் அமைப்புக்களின் தலைவர்களைத் தேயிலைச் சபைக்கு நியமிப்பதன் மூலம் விரிவாக்கப்பட்டது.

வருவாய், தொழில் உருவாக்கம், வெளிநாட்டுச் செலாவணி உழைப்புப் போன்ற இன்னோரன்ன நியதிகளில், நாட்டின் பொருளாதாரத்திற்குத் தேயிலைத் துறையினுல் வழங்கப்பட்ட பங்களிப்பு இன்னமும் பெருமளவினதாகவே இருப்பதனைக் கவனத்திற் கொண்டு இடர்ப்பாட்டில் இருக்கும் பொழுது இத்தேயிலைத் துறை உதவிகளைப் பெறும் நிலையில் இருத்தல் வேண்டும். இத்துறைக்கு வழங்கப்பட்ட வரி நிவாரணங்களுக்குப் புறம்பாக அரசதுறைப் பெருந்தோட்டங்களுக்கென எடுத்துரைக்கப்பட்ட நடுத்தரகால முதலீட்டு நிகழ்ச்சித் திட்டமும், 1985 இல் நிறுவப்பட்ட தேயிலைக்கான சமநிலைப்படுத்தும் நிதியமும் தேயிலை உற்பத்தியாளர்களுக்குச் சில நிவாரண வழிமுறைகளை வழங்கலாம். தேயிலைக்கான சமநிலைப்படுத்தும் நிதியத்தின் கீழ் அரசதுறை அதேபோல் தனியார்துறை உற்பத்தியாளர்களுக்கான ஒரு உதவித் திட்டம் 1986 இல் எதிர்பார்க்கப்படுகின்றது. இத்திட்டங்களின் குறிக்கோள்கள் அடையப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1985 இல் தாழ்நிலத் தேயிலை உற்பத்திகளில் ஏற்பட்ட அதிகரிப்பு இப்பிரதேசங்கள் சிறு உடமைகள் தேயிலை உற்பத்தியினை விரிவாக்குவதற்கான உள்ளார்ந்த வளத்தினைக் கொண்டிருப்பதனை எடுத்துக் காட்டியது. இன்னமும் பெரும்பான்மையான சிறு உடைமையாளர்கள் பற்றுக்குறையான பதனிடல் வசதிகள், சந்தைப்படுத்தலில் இடைத் தரகர்களின் செல்வாக்கு, நிறுவன ரீதியான கொடுகடன் மூலவளங்களுக்கு வரையறுக்கப்பட்ட வாய்ப்புக்கள் போன்ற தடைகளை எதிர்நோக்கவேண்டியிருந்தனர். இப்பிரச்சனைகளில் சிலவற்றைக் களைவதற்குத் தேயிலை சிறு உடமை அபிவிருத்தி மேலாண்மைச் சபையினுல் முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும் சிறு நில உடைமையாளர்துறையின் முழுமையான உள்ளார்ந்த வளத்தினையும் பெறுவதற்கு இன்னமும் தடைகள் இருக்கின்றன. இதனுல் பெருமளவான சிறு உடைமையாளர் குறிப்பாகத் தாழ்நிலப் பகுதிகளின் சிறு உடைமையாளர்களை முன்னேற்றுவதற்கு ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்தி அணுகுமுறைகள் இன்றியமையாததாகும்.

**இறப்பர்**

1985 ஆம் ஆண்டின் இறப்பர் உற்பத்தி 1,380 இலட்சம் கிலோக்கிரும்களெனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. 44 இலட்சம் கிலோக்கிரும்கள் கொண்ட வீழ்ச்சியானது 1984 இன் உற்பத்தியைவிட மூன்று சதவீதம் குறைவானதாகும். முன்னைய ஆண்டினைப் போன்று உற்பத்தியில் ஏற்பட்ட ஒரு வீழ்ச்சியும் அரசதுறைத் தோட்டங்களிலேயே காணப்பட்டது. தனியார் துறைத் தோட்டங்களில் இறப்பர் உற்பத்தியானது முன்னைய ஆண்டினைப் போல் ஏறக்குறைய அதே மட்டத்திலேயே நிலைத்திருந்தது. இதன் விளைவாக மொத்த உற்பத்தியில் தனியார்துறை தொடர்பான பங்கு 1984 இன் 67 சதவீதத்திலிருந்து 1985இல் 70 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது. அரசதுறையின்

உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியானது பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்ட பரப்பளவில் ஏற்பட்ட வீழ்ச்சியினதும் ஒரு எக்டேயருக்கான சராசரி விளைச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சியினதும் இணைந்த விளைவாகும். அரச, தனியார் துறைத் தோட்டங்களின் உற்பத்தி மழை கூடிய வானிலை நிலைமைகளினுல் முக்கியமாக இறப்பர் உற்பத்திப் பகுதிகளில் ஏற்பட்ட குறைவான பாலெடுத்தலினுல் பாதிக் கப்பட்டிருக்கக்கூடும்.

இறப்பரின் கீழ் மொத்தமாகப் பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பும், பாலெடுத் தலின் கீழான பரப்புக்களும் 1985 இல் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தன. முன்னையது சில இறப்பர் எல்லை நிலங்கள் தேயிலைப் பயிர்ச்செய்கையின் கீழ்க் கொண்டுவரப் பட்டதனுல் முக்கியமாக ஏற்பட்டது. அதிகரிக்கப்பட்ட மீள்நடுகையின் விளை வாகப் பாலெடுத்தலின் கீழான பரப்பளவு பெருமளவுக்கு வீழ்ச்சியுற்றது. 1982 தொடக்கம் சராசரி விளைச்சலில் இருந்த அதிகரித்த போக்கானது 1985 இல் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. வளமாக்கிப் பாவனையில் அதிகரிப்பு இருந்த போதும் சராசரி விளைச்சலில் ஏற்பட்ட குறைப்பிற்கு மழைமிக்க வானிலை காரண மாகப் பெரும்பாலான இறப்பர் உற்பத்தி மாவட்டங்களில் பாலெடுக்கும் நாட் களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட குறைப்பானது பெரிதும் காரணமாயிற்று.

அட்டவணை 1.8

**இறப்பர்த் துறையின் புள்ளி விபரங்கள் 1983 — 1985**

| விடயம் | கூறு | 1983 | 1984 (அ) | 1985 (ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி ... | ப. இ. கி. கி. | 140 | 142 | 138 |
| 2. பரப்பளவு | | | | |
| 2.1 பயிர்ச் செய்கைக்குட்பட்ட ... | '000 எக்டேயர் | 205.6 | 205.6 | 205.5 |
| 2.2 பால் எடுக்கும் ... | ,, | 170.5 | 169.0 | 168.2 |
| 3. விளைச்சல் ... | கி.கி./எக்டேயர் | 818 | 840 | 838 |
| 4. வளமாக்கி வழங்கல்கள் ... | '000மெ.தொன்கள் | 18.6 | 23.5 | 24.2 |
| 5. மீள்நடுகை ... | எக்டேயர்கள் | 4,862 | 5,530 | 6, 694 |
| 6. விலைகள் | | | | |
| 6.1 ஏற்றுமதிகள் க. வ. பெ. ... | ரூ./கி. கி. | 22.77 | 26.16 | 21.33 |
| 6.2 கொழும்பு ஆர். எஸ். எஸ். 1 ... | ,, | 13.95 | 14.94 | 16.17 |
| 7. உற்பத்திச் செலவு (இ) ... | ,, | 9.90 | 12.06 | 13.67 |
| 8. ஏற்றுமதிகள் ... | ப. இ. கி. கி. | 125.2 | 126.2 | 120.5 |
| 9. உள்நாட்டு நுகர்வு ... | ,, | 16.4 | 15.1 | 15.2 |
| 10. ஏற்றுமதி வருவாய்கள் ... | ரூ. ப. இ.<br>(சிஎஉ. ப. இ.) | 2,852.0<br>(114) | 3,301.0<br>(127) | 2,566.0<br>(93) |
| 11. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சத வீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (ஈ) | | 1.7 | 1.6 | 1.4 |

மூலங்கள்: இறப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களம்.
தேசிய வளமாக்கிச் செயலகம்.
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தியமைக்கப்பட்டது.

(ஆ) தற்காலிகமானவை.

(இ) அரசதுறைப் பெருந்தோட்டங்களினதும், தனியார்துறைப் பெருந்தோட்டங்களினதும், சிறு உடைமை யாளர்களினதும் உற்பத்திச் செலவின் கணிக்கப்பட்ட சராசரி.

(ஈ) பயிர் வளர்த்தலிலும், பதனிடலிலும் மட்டும்.

இறப்பர்த் துறைக்கான வளமாக்கி வழங்கல்களின் அதிகரிக்கும் போக்கு மேலும் தொடர்ந்தது. இறப்பர்த் துறைக்கான வளமாக்கி வழங்கல்களின் மொத்த அளவு 24,200 மெற்றிக் தொன்களாகவிருந்து முன்னைய ஆண்டினைவிட 700 மெற்றிக் தொன்கள் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினைக் காட்டியது. தனியார் துறைக்கான வளமாக்கி வழங்கல்களில் அதிகரித்த போக்குக் காணப் பட்டபோதும் வளமாக்கிப் பாவனையானது தொடர்ந்தும் முதிர்ச்சியுறாத இறப்பர் மரங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. முதிர்ச்சி அடைந்த இறப்பர் நிலங் களில் வளமாக்கிப் பாவனையைப் போதியளவில் ஊக்குவிப்பதன் மூலம் தனியார் துறைதூண்டப்படாவிடின் உற்பத்தியில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினைப் பெறுவது முடியாததாகவிருக்கும்.

இறப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் கொடுக்கப்பட்ட தற்காலிக மான தரவுகளின்படி இவ்வாண்டில் மீள்நடுகை செய்யப்பட்ட மொத்த நிலப் பரப்பு 1,164 எக்டேயர்களினால் அல்லது 21 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வதி கரிப்பில் தனியார்துறை 64 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் அரசதுறை எஞ் சிய 36 சதவீதத்திற்கு வகை கூறியது. சார்பு ரீதியில் தனியார் துறையின் சிறந்த செயற்பாடுகளுக்கு, மூன்று முக்கிய இறப்பர் உற்பத்தி செய்யும் மாவட்டங்க ளான கேகாலை, களுத்துறை, இரத்தினபுரி போன்றவற்றில் இடம் பெற்றுள்ள உலக வங்கியின் உதவி பெற்ற இறப்பர் சிறு உடைமையாளர் நிகழ்ச்சித் திட் டங்களே பெருமளவுக்குக் காரணமாகவிருந்தன. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1981 முதல் 1984 வரையிலான நான்கு வருட காலப் பகுதியில் 10,865 எக்டேயர்கள் மீள்நடுகை செய்யப்பட்டதுடன், 1985 இல் 3,461 எக்டேயர்கள் மீள்நடுகைக்காகப் பிடுங்கப்பட்டன. இவ்வாண்டில் இறப்பர் மீள்நடுகைக்கான உதவு தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பும் இந்த அதிகரிப்பினை அடைவதற்கு உதவி புரிந்தது.

இறப்பர் புதிய பயிரிடுகை முன்னைய ஆண்டில் கடுமையாகப் பின்னடைந்த போதும் 1985 இல் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தைக் காட்டியது. இறப்பர் புதிய பயிரிடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பு இரு மடங்காக 1984 இன் 1,263 எக்டேயர்களிலிருந்து 1985 இல் 2,723 எக்டேயராக விளங்கியது. இது பெரும் பாலும் இவ்வாண்டின் தொடக்கத்திலிருந்து உதவித் தொகை வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பின் நேரடி விளைவாகும். மீள்நடுகைக்கும், புதுப் பயிரிடுகைக்கும் தூண்டு தல் அளிக்கும் மேலதிக ஊக்குவிப்பாகத் தனியார்துறைத் தோட்டங்களுக்கும், சிறு உடைமையாளருக்குமான இறப்பர் மீள்நடுகைக்கான உதவு தொகை எக்டேயர் ஒன்றிற்கு ரூ. 22,857 இலிருந்து எக்டேயர் ஒன்றுக்கு ரூ. 24,710 ஆகவும், இறப்பர் புதிய பயிரிடுகைக்கு வழங்கப்பட்ட உதவுதொகையானது எக்டேயர் ஒன்றுக்கு ரூ. 20,386 இலிருந்து எக்டேயர் ஒன்றுக்கு ரூ. 22,239 ஆகவும் அதிகரிக்கப்பட்டது.

சிறிய, தனியார் தோட்டச் சொந்தக்காரர்களும், சிறு உடைமையாளரும், கூலிகளைக் குறைந்த மட்டத்தில் வைத்திருந்ததன் மூலம் செலவு அதிகரிப்புக்களைக் கட்டுப்படுத்தினர். சிறு உடமையாளர்களின் விடயத்தில் உற்பத்திச் செலவில் ஒரு சிறிதளவு அதிகரிப்பே அவதானிக்கப்பட்டதுடன் 1984 இல் கிலோக்கிராம் ஒன்றிற்கு ரூ. 10.28 சதத்திலிருந்து 1985 இல் கிலோக்கிராம் ஒன்றிற்கு ரூ. 10.85 சதமாக விளங்கியது. இதற்கு மாறாகப் பெருமளவு தனியார்துறைத் தோட்டங் களின் உற்பத்திச் செலவு 1984 இன் கிலோக்கிராமொன்றிற்கு ரூ. 13.83 சதத்திலிருந்து 1985 இல் கிலோக்கிராமொன்றிற்கு ரூ. 16.48 சதமாக 19 சத

வீதத்தால் அதிகரித்து விளங்கியது. அரசதுறைத் தோட்டங்களில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்திச் செலவு 1984 இன் கிலோக்கிரும் ஒன்றுக்கு ரூ. 14.00 இலிருந்து 1985 இல் கிலோக்கிரும் ஒன்றுக்கு ரூ. 15.58 சதமாக 11 சதவீதத்தால் அதிகரித்து விளங்கிய வேளையில் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினது உற்பத்திச் செலவு 1984 இன் கிலோ கிருமொன்றிற்கு ரூ. 13.01 சதத்திலிருந்து 1985 இல் கிலோக்கிருமொன்றிற்கு ரூ. 16.72 சதமாக 29 சதவீதத்தால் அதிகரித்து விளங்கியது. முன்னைய ஆண்டில் அரசதுறைத் தொழிலாளர்களுக்குக் கூலி அதிகரிப்பு வழங்கப்பட்டதினுல் அரச துறைத் தோட்டங்களினதும் பெருமளவு தனியார் துறைத் தோட்டங்களினதும் உற்பத்திச் செலவானது, சிறு உடைமையாளர்களையும், சிறிய தனியார் துறைத் தோட்டங்களையும் விட உயர்ந்த மட்டத்திலேயே நிலைத்திருந்தது. தனியார் துறையில் உள்ள பெருமளவு தோட்டங்கள் அரசதுறைத் தோட்டங்களுடன் ஒப்பிடத்தக்க முறையில் கூலி செலுத்தாமல் தொழிலாளர்களைப் பெறுவது கடினமாக இருந்தமையினுல் அவற்றின் உற்பத்திச் செலவும் அதிகரித்துக் காணப் பட்டது.

பெருமளவு தனியார்துறை அல்லது அரச தோட்டங்களுக்கு எல்லையிலுள்ள சிறு உடைமைகளைக் கொண்டிருக்கும் சிறு உடைமையாளர்களுக்கு அந்நிலங்களில் இறப்பர் மரங்களில் பாலெடுப்பது பிரச்சினைக்குரியதாக இருந்தது. தொழிலாளர் உயர்ந்த கூலிகளில் பெரிய தோட்டங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டதிலிருந்து சிறு உடைமையாளர் சொந்தமாகத் தமது தோட்டங்களுக்குத் தொழிலாளர் களைக் கொண்டிராமை காரணமாகச் சில நாட்களில் தொழிலாளர் கிடைப்பது அருமையாக இருப்பதால் அந்த நாட்களில் பாலெடுத்தல் நடைபெறுவதில்லை. அப்படி அவர்கள் தொழிலுக்குக் கிடைத்த காலத்திலும் உயர்ந்த கூலிகள் செலுத்தப்படுவதனுல் இவர்களுக்கு மிகச்சிறிதளவு இலாபமே கிடைக்கிறது.

எல்லாத் தரங்களிலுமான இறப்பர் ஏற்றுமதி விலைகளில் (கஏபெ) 18 சத வீதமான வீழ்ச்சி காணப்பட்டபோதும் ஆர்எஸ்எஸ் 1 இன் கொழும்புச் சந்தை விலைகள் 8 சதவீதத்தால் அதிகரித்தது. இந்த விலை அதிகரிப்பின் மூலம் சிறு உடைமையாளரும் சிறிய தனியார் தோட்டங்களும் ஒரு குறிப்பிட்டளவு நன்மையை பெற்றபோதும் அரசதுறைத் தோட்டங்களையும், பெருமளவு தனியார் துறைத் தோட்டங்களையும் பொறுத்தவரையில் அவர்களின் உற்பத்திச் செலவின் அதிகரிப்பினை ஈடுசெய்வதற்கு இந்த அதிகரிப்புக்கள் போதுமானதாக இருக்க வில்லை

முன்னைய ஆண்டு தொடக்கம் ஏற்றுமதித் தீர்வையில் சீர்திருத்தங்கள் ஏற்பட்ட போதிலும் இறப்பர்த் துறையினைப் பொறுத்தவரையில் மீளாய்வின் கீழான ஆண்டில் வரிவிதிப்பு அமைப்புக்களில் எவ்வித மாற்றங்களுமிருக்கவில்லை. அத்துடன் 1985 காலத்தில் இறப்பர் துறையைப் பொறுத்தவரை அதனைப் பாதிக்கும் பெரும் கொள்கை மாற்றங்களெதுவும் இருக்கவில்லை. எனினும் இறப்பர் கட்டுப்பாட்டுச் சபையின் நிருவாக நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்துவதற்கான மேலுமொருபடியாகக் காலி, மாத்தறை ஆகிய இரு மாவட்டங்களையும் கவனிப் பதற்காக 1985 இல் காலியில் ஒரு பிரதேச அலுவலகம் திறக்கப்பட்டது. 1984 இன் மதிப்பீட்டுப் புள்ளி விபரங்கள் இறப்பர் பற்றி வெளிப்படுத்திய விடயங்களைக் கவனத்திற் கொண்டு பின்தங்கிய பகுதிகளில் 1985 இல் 32,736 எக்டேயர்கள் (80,890 ஏக்கர்) கொண்ட பதிவு செய்யப்படாத இறப்பர்

நிலங்களைப் பதிவுசெய்யும் பொருட்டு, நடமாடும் அலுவலகங்களை ஏற்படுத்துவதற்கான வழிவகைகள் எடுக்கப்பட்டன. இப்பயிர்ச்செய்கையாளர்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டு, பணிகளை விரிவுபடுத்துவதற்கான ஒழுங்குவகைகள் மேற்கொள்ளப்பட்டன. நடுத்தரத் தவணை முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரசதுறைப் பெருந்தோட்டங்களுக்கான அபிவிருத்திச் செலவினம் எதிர்பார்க்கப் பட்டமையைக் கருத்திற் கொண்டு 1985 இல் மீள் பயிரிடுகைக்கோ, புதிய பயிரிடுகைக்கோ அல்லது புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கோ, அரசதுறை இறப்பர்த் தோட்டங்களுக்கு நிதியுதவிகள் எதுவும் வழங்கப்படவில்லை.

உற்பத்தி நியதிகளில், இறப்பர் உற்பத்தியானது எக்டேயர் ஒன்றுக்கான விளைச்சலில் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்படும் நிலப்பரப்பிலும் ஒரு உயர் நிலையை அடைந்திருந்தது. பயிர்ச்செய்கையின் கீழான பரப்பளவை விரிவாக்குவதற்கு வரையறுக்கப்பட்ட வாய்ப்புக்களே உள்ளமையை நோக்குகையில் உற்பத்தியை அதிகரிப்பதற்கான எதிர்கால முன்னேற்றம் அதிகரிக்கின்ற உற்பத்தியிலும் அதேவேளை தாக்கம் மிக்க மீள்நடுகை மட்டங்களைப் பேணுவதிலுமே பெருமளவுக்குத் தங்கியிருக்கும். இம்முடிவின்படி உயர்ந்த விளைச்சலுக்கான இனங்களைப் பயன்படுத்துவதனை விரிவுபடுத்துவதும் விரும்பத்தக்க மட்டங்களுக்கு வளமாக்கிப் பயன்பாடு உட்படப் பயிர்ச்செய்கை நடைமுறைகளைப் பேணுதலும் மிக முக்கியமானதாக உள்ளது. எனினும், சிறு உடைமையாளர்களின் ஆதிக்கத்திற்குட்பட்ட இறப்பர்துறையின் குறைந்த வருவாய்கள் சிறந்த வழிமுறைகளை விரிவான முறையில் மேற்கொள்வதைத் தடைசெய்கின்றது.

சிறு உடைமையாளர் கூடப் போதியளவு பதப்படுத்தல் வசதிகள் இல்லாமையால் பாதிக்கப்பட்டிருப்பதுடன் சில சமயங்களில் லேற்றெக்ஸ் இறப்பரைப் பதப்படுத்துவதற்காக நீண்ட தூரங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டியுமிருந்தது. சிறந்த பதப்படுத்தல் வசதிகள் இன்மையால் செப்பமற்ற முறையில் பதப்படுத்திய லேற்றெக்ஸ் இறப்பர், குறைந்த விலையினைப் பெற்றமை அவர்களின் நிலைமையை மேலும் மோசமாக்கியது. எனவே பொருளாதாரத்தில் மிக முக்கியமான இத்துறையினை மீட்டெடுப்பதற்குச் சில ஊக்குவிப்புக்கள் அத்தியாவசியமாகும்.

தெங்கு

1985 இல் தெங்கு உற்பத்தி 29,580 இலட்சம் காய்களைக் கொண்ட மிக உயர்ந்த மட்டத்தை அடைந்தது. இது முன்னைய ஆண்டினைவிட 52 சதவீதம் கொண்ட அதிகரிப்பாக இருந்ததுடன் 1972 இற்குப் பின்னர் ஏற்பட்ட மிக உயர்ந்த மட்டமுமாகும். தெங்கு உற்பத்தியில் ஏற்பட்ட இவ்வியக்கத்தக்க அதிகரிப்பிற்கு முன்னைய ஆண்டின் சாதகமான வானிலை நிலைமைகளின் காலங்கடந்த தாக்கமும் அதிகரித்த வளமாக்கிப் பாவனையும் காரணமாக இருக்கலாம். கடந்த ஆண்டின் பெரும்பகுதியில் தெங்கு உற்பத்தியாகும் முக்கிய பகுதிகளில் பரவலான மழையும், வளமாக்கிப் பாவனையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பும் கடந்த சில ஆண்டுகளாக அவதானிக்கப்பட்டுள்ளன. செத்தெம்பர், ஒற்ரோபர் காலத்தில் ஏற்பட்ட உற்பத்தி உச்ச மட்டத்துடன் பெருமளவு அதிகரிப்பு 1985 இன் பின்னரைப் பகுதியிலேயே அவதானிக்கப்பட்டது.

தேங்காய் உற்பத்திகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, தேங்காய் எண்ணெய் உற்பத்தியில் ஏற்பட்ட மூன்று மடங்கிற்கும் கூடுதலான அதிகரிப்பிற்கும் தேங்காய்த் துருவல் உற்பத்தியில் ஏற்பட்ட 64 சதவீத அதிகரிப்பிற்கும் வழியமைத்தது. 1985 ஆம் ஆண்டுப் பகுதியில் உலர்த்திய தேங்காய் ஏற்றுமதிகள் மூன்று மடங்கிற்கும் கூடுதலாக உயர்வடைந்த வேளையில் உடன் காய் ஏற்றுமதிகள் இரண்டு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்தன. தேங்காய் மிகுதியாகவும் மலிவான விலையிலும் கிடைக்கத்தக்கதாக இருந்தமை பதனிடலுக்குப் பெருமளவு காய்களையும் தெங்கு உற்பத்தி ஏற்றுமதிகளில் மிகப் பெரும் அதிகரிப்புக்களையும் தோற்றுவித்தது. தெங்கு உற்பத்திகளின் மீதான குறிப்பிட்ட சில ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமை உலர்த்திய தேங்காய், உடன் காய் ஆகியவற்றிற்கு 1985 ஆம் ஆண்டில் உலக சந்தையில் பெருமளவு போட்டி காணப்படாத போதும் உயர்ந்த ஏற்றுமதிகளை இயலச் செய்தது.

1982 ஆம் ஆண்டிலிருந்தும் அதிகரித்த போக்கினைக் காட்டிய தெங்குத் துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1985 இல் 18 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இதற்கு முக்கிய காரணம் 1985 இல் அவதானிக்கப்பட்ட தேங்காய் விலைகளின் கடுமையான வீழ்ச்சியேயாகும். வளமாக்கிப் பாவனையில் ஏற்பட்ட முழு வீழ்ச்சியும் தேங்காய் உற்பத்தி மிக உயர்வாகவும் விலைகள் மிகக் குறைவாகவும் இருந்த ஆண்டின் பின்னரைப் பகுதியிலேயே ஏற்பட்டது.

இலங்கை வங்கியினாலும், மக்கள் வங்கியினாலும் கூடிக் குறையாமல் ஒரே அளவான முறையில் தொழிற்படுத்தப்படும் தெங்கு வளமாக்கிக் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 1984 இல் 1,614 இலிருந்து 1985 இல் 1,063 இற்கு 34 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கடன்களின் தொகையும் 1984 இன் ரூ. 135 இலட்சங்களிலிருந்து 1985 இல் ரூ. 87 இலட்சங்களுக்கு 36 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இது கடந்த ஆண்டில் வழங்கப்பட்ட அத்தகைய கடன்களில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்பிற்கு மாறானதாகும். 1985 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் குறைந்த செயலாற்றம் தேங்காயின் விலைகளில் ஏற்பட்ட கடுமையான குறைப்பின் காரணமாக வேளாண்மையாளர்கள் முதலீடு செய்வதற்குத் தயங்கியமையைப் பிரதிபலித்தது.

கடந்த அண்மைக் காலத்தில் தெங்குத்துறையில் பல பயிர்ச்செய்கை நடைமுறைகள் மிகக் குறைவாக இருந்தபோதும் 1985 இல் சில முன்னேற்றங்கள் காணப்பட்டன. புத்தாக்கம் செய்யப்பட்ட பரப்பளவு 1984 இன் 5,092 எக்டேயர்களிலிருந்து 1985 இல் 6,230 எக்டேயர்களுக்கு 22 சதவீதத்தினால் உயர்வடைந்தது. மீள நடப்பட்ட / கீழ் நடுகை செய்யப்பட்ட பரப்பளவு 1984 இன் 2,553 எக்டேயர்களிலிருந்து 1985 இல் 4,102 எக்டேயர்களுக்கு 61 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்ததுடன் அரச உதவுதொகைத் திட்டத்தின் கீழான இடைப் பயிர்ச்செய்கையும் அதிகரித்தது. புல், மிளகு என்பனவற்றுடனான இடைப் பயிர்ச்செய்கை முறையே 37 சதவீதத்தினாலும், 7 சதவீதத்தினாலும் உயர்வடைந்த வேளையில் கோப்பியுடனான இடைப் பயிர்ச்செய்கை சிறிதளவால் அதிகரித்தது. இவ்வாண்டுக் காலத்தில் கொக்கோவுடனான இடைப் பயிர்ச்செய்கையில் எவ்வித அதிகரிப்பும் காணப்படவில்லை.

புத்தாக்கம், மீள்பயிரிடுகை, கீழ்ப்பயிரிடுகை ஆகியவற்றில் காணப்பட்ட முன்னேற்றத்திற்கு இந்நோக்கங்களுக்கான உதவுதொகை முன்னைய ஆண்டில் கணிசமாக அதிகரித்தமை பெருமளவு காரணமாக இருக்கலாம். புல்லுடனுன இடைப் பயிர்ச்செய்கைப் பரப்பளவில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு பாற்பண்ணைக்கு வழங்கப்பட்ட பல்வேறு ஊக்குவிப்புக்கள் காரணமாக இருக்கலாம். தெங்கு நிலங்களின் செறிவான பயன்பாட்டினைப் பொறுத்தவரை இடைப்பயிர்ச்செய்கை மூலமாக மேலதிக வருமானத்தையும் தொழில்வாய்ப்பையும் உருவாக்குவதற்கான செயற்பாடு மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. கடந்த பல ஆண்டுகளாகத் திருத்தப் படாதிருக்கும் உதவுதொகை வீதம் அதிகரித்த செலவுகளைக் கருத்திற் கொள்கையில் போதுமான ஊக்குவிப்பாகக் காணப்படவில்லை. எனவே வளமாக்கியைப் பெறுவதற்கான சிறந்த வழிவகைகள், விரிவாக்கல் பணிகள் போன்ற ஏனைய ஊக்குவிப்புக்களுடன் உதவுதொகை அதிகரிப்பும் இடைப் பயிர்ச்செய்கையில் பெருமளவு விரிவாக்கத்தினை மேம்மடுத்துவதற்கு இன்றியமையாததாகும். பாற்பண்ணைச் செயற்றிட்டத்தை ஊக்குவிப்பதும் உற்பத்தியாளர் வருவாயை அதிகரிப்பதற்கு உதவும்.

உலகம் முழுவதும் தெங்கு உற்பத்தியில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பும், ஏனைய மரக்கறி எண்ணெய் வகைகளின் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பும் 1985 இல் தெங்கு உற்பத்தியின் பன்னுட்டு விலைகளில் கூடியளவு வீழ்ச்சியை ஏற்படுத்தின. தேங்காய் எண்ணெய், தேங்காய்த் துருவல், உலர்த்திய தேங்காய் போன்ற முக்கிய தெங்கு உற்பத்திகளின் விலைகள் ஆண்டின் தொடக்கப் பகுதி விலைகளைவிடப் பின்னரைப் பகுதியில் அரைப் பங்கிற்கும் குறைவாக இருந்தன. விலைகளில் ஏற்பட்ட இக்கடுமையான வீழ்ச்சி தெங்கு உற்பத்திகளின் மீதான ஏற்றுமதித் தீர்வைகளின் மாற்றத்தை அவசியமாக்கியது. இதன் விளைவாகத் தெங்கு ஏற்றுமதிகளுக்கான நிவாரண அவசர வழிமுறைகளாக வரவு செலவுத் திட்டத்தில் தீர்வைக் குறைப்பு அறிவிக்கப்பட்டது. 1985 நவெம்பர் 14 ஆம் நாளிலிருந்து தேங்காய்த் துருவல் அதே போன்று உண்ணத்தக்க உலர்த்திய தேங்காய் ஆகியவற்றின் மீதான தீர்வை மெற்றிக் தொன்னென்றிற்கு ரூ. 2,500 இனுல் தேங்காய்த் துருவலிற்கு ரூ. 7,500 இலிருந்து ரூ. 5,000 இற்கும், உண்ணத்தக்க உலர்த்திய தேங்காய்க்கு மெற்றிக் தொன் ஒன்றிற்கு ரூ. 7,250 இலிருந்து ரூ. 4,750 இற்கும் குறைக்கப்பட்டது.

தேங்காய்த் துருவல் ஏற்றுமதிகளுக்கு அனுமதிக்கப்பட்ட ஆகக் குறைந்த விலை இவ்வாண்டுக் காலத்தில் பல தடவைகள் திருத்தப்பட்டதுடன் 1985 ஒட்‌ 18 ஆம் நாளிலிருந்து இந்த ஆகக் குறைந்த விலைத் தேவைகள் ஒழிக்கப் பட்டன. இத்திருத்தத்தினைத் தொடர்ந்து ஏற்றுமதியாளர்கள் பன்னுட்டுச் சந்தையில் நிலவும் விலைகளில் தேங்காய்த் துருவல் உற்பத்திகளை ஏற்றுமதி செய்ய முடியும். 1971 ஆம் ஆண்டு வரை பல்வேறு சட்டங்களின் கீழ்ச் சேகரிக்கப்பட்ட தெங்கு ஏற்றுமதிகளின் மீதான தீர்வை திருத்தப்பட்டதுடன் 1985 பெப்புருவரி 1 ஆம் நாளிலிருந்து 1971 இன் எண் 46 கொண்ட தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் பிரிவு 33 துணைப் பிரிவு 1 இன் நியதிகளுக்கமையத் தீர்வை சேகரிக்கப் பட்டது.

1985 திசெம்பர் 16 ஆம் நாளின் எண் 2 கொண்ட தெங்கு உற்பத்திகள் ஏற்றுமதித் தடை ஒழுங்கு விதிகளுக்கான திருத்தத்தின் நியதிப்படி உடன் காய்கள், தேங்காய் ஓடுகள், தெங்கு ஈர்க்குகள், செவ்விளநீர் அல்லது தேங்காய், தெங்கு வளை மரங்கள், தேங்காய்ச் சிரட்டைக் கரி போன்ற இன்னேரன்ன சில தெங்குத்துணை உற்பத்திகளின் ஏற்றுமதிகள் ஏற்றுமதி உரிமங்கள் பெறவேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்பட்டன.

அட்டவணை 1.9

## தெங்குத் துறையின் புள்ளி விபரங்கள் 1983—1985

| விடயம் | அலகு | 1983 | 1984 | 1985(அ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி (ஆ) ... | ப. இ. காய்களில் | 2,312 | 1,942 | 2,958 |
| 1.1. தேங்காய்த் துருவல் ... | ப. இ. காய்களில் (இ) | 295 | 221 | 362 |
| 1.2. தேங்காய் எண்ணெய் ... | ப. இ. காய்களில் (இ) | 663 | 295 | 1,039 |
| 1.3. உலர்த்தியதேங்காய்ஏற்றுமதிகள் ... | ப. இ. காய்களில் (இ) | 18 | 12 | 37 |
| 1.4. உடன்காய் ஏற்றுமதிகள் ... | ப. இ. காய்களில் | 6 | 4 | 10 |
| 1.5. உள்நாட்டு தேங்காய் நுகர்வு (ஈ) ... | ப. இ. காய்களில் | 1,373 | 1,404 | 1,421 |
| 2. சராசரி விலை | | | | |
| 2.1. கொழும்பு ... | காய்க்கு ரூபா | 2.42 | 4.07 | 2.18 |
| 2.2. ஏற்றுமதி க. எ. பெ. ... | காய்க்கு ரூபா | 3.66 | 6.48 | 3.59 |
| 3. வளமாக்கி வழங்கல்கள் ... | '000 மெ. தொ. | 35.7 | 50.0 | 41.0 |
| 4. உற்பத்திச் செலவு ... | காய்க்கு ரூபா | 0.60 | 0.63 | 0.64 |
| 5. மீள் பயிரிடல்/கீழ் பயிரிடல்(உ) ... | எக்டேயர்கள் | 2,641 | 2,553 | 4,102 |
| 6. புதிய பயிரிடல் (உ) ... | எக்டேயர்கள் | 3,394 | 1,580 | 1,561 |
| 7. ஏற்றுமதி வருவாய்கள் ... | ப. இ. ரூபா | 1,921 | 2,118 | 3,093 |
| | (சிஎஉ ப. இ.) | (76) | (81) | (112) |
| 7.1. உள்ளீட்டு உற்பத்திகள் ... | ப. இ. ரூபா | 1,409 | 1,553 | 2,383 |
| | (சிஎஉ. ப. இ.) | (56) | (60) | (86) |
| 7.2. ஏனைய உற்பத்திகள் ... | ப. இ. ரூபா) | 512 | 566 | 710 |
| | (சிஎஉ. ப. இ.) | (20) | (22) | (26) |
| 8. மொ. உ. உற்பத்தியில் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (ஊ) ... | | 4.2 | 3.5 | 3.5 |

மூலங்கள்: தெங்குப் பயிர்ச்செய்கை சபை,
தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபை,
தேசிய வளமாக்கிச் செயலகம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை.

(ஆ) மதிப்பீடு (உலர்த்திய தேங்காய் இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு சீராக்கஞ் செய்யப்படுவதன் காரணமாக பகுப்பாய்வு மொத்த உற்பத்தியுடன் கூட்டப்படுவதில்லை.)

(இ) தேங்காய்க்குச் சமனுன ஒரு — மெற். தொன் தேங்காத் துருவல் = 6,800 காய்கள்.
— மெற். தொன் எண்ணெய் = 8,000 காய்கள்.
— மெற். தொன் உலர்த்திய தேங்காய்= 4,925 காய்கள்.

(ஈ) தலைக்குரிய வீட்டு நுகர்வு 90 காய்களெனவும் அடிப்படையில் மதிப்பிடப்பட்டது. கைத்தொழில் பயன்பாட்டினைத் தவிர.

(உ) விபரமான தரவுகள் கிடைக்காமையின் காரணமாக 0.4 எக்டேயர்களுக்கும் குறைவான உடைமை களில் மேற்கொள்ளப்பட்ட பயிரிடல் நடவடிக்கைகளை இது உள்ளடக்கவில்லை.

(ஊ) உற்பத்தி செய்தலும் பதனிடலும் மட்டும்.

தெங்கு ஏற்றுமதித்துறைக்குப் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டுள்ள போதும் வீழ்ச்சியடைகின்ற விலைகளினுல் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டனர். கொழும்புச் சந்தையில் தேங்காயின் சராசரி விலை ரூ. 2.18 ஆக அமைந்து கடந்த ஆண்டினைவிடப் பெரும்பாலும் அரைப்பங்காக விளங்கியது. 1985 இன் அனுபவம் சந்தையில் பொருட்கள் மிதமிஞ்சிக் காணப்பட்ட சந்தர்ப்பத்தில் உற்பத்தியாளரின் நிலையைத் தெளிவாக எடுத்துக் காட்டியது. தெங்கின் விலை வீழ்ச்சியிலிருந்தும் அனுகூலங்களைப் பெற்ற பதனிடல் துறை பெருமளவு இருப்புக்களைக் கொண்டிருந்ததுடன் அத்தகைய நேரங்களில் கொள்வனவுகளை அவை மேற்கொள்ளக்கூடிய விதத்தில் நிதி உதவிகளையும் அவற்றிற்கு அளிக்கவேண்டியிருந்தது. தேங்காய் விலைகள் வீழ்ச்சியடையும்பொழுது வளமாக்கிப் பாவனை குறைவடைவது எதிர்கால உற்பத்தியில் தாழ்வை ஏற்படுத்தி நுகர்வோரைப் பாதிக்கும். ஆகவே எடுத்துரைக்கப்பட்டுள்ள சமநிலைப்படுத்தும் நிதியம் உற்பத்தியாளர் நலன்களையும் அதே போன்று நுகர்வோர் நலன்களையும் கொண்டிருக்க வேண்டும்.

மீளாய்விற்குரிய ஆண்டில் தெங்குப் பதனிடல் கைத்தொழிலில் தடை செய்யப்பட்டிருந்த சில நடவடிக்கைகள் தளர்த்தப்பட்டன. முன்னர் புதிய தேங்காய்த் துருவல் ஆலைகளைத் திறக்கவோ, இருக்கும் ஆலையொன்றின் இய லளவை அதிகரிக்கவோ அனுமதியளிக்கப்படவில்லை. வெளிநாட்டுச் சந்தைகளின் தேவைகளை ஈடுசெய்வதற்கு ஏற்ற விதத்தில் தரமான தேங்காய்த் துருவல் உற்பத்திகளின் உற்பத்தியை இயலச் செய்யும் பொருட்டுத் தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபையினால் குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறைகளுக்கிணங்கப் புதிய தேங்காய்த் துருவல் ஆலைகளைத் திறப்பதற்கோ அல்லது தற்போதுள்ள ஆலை யொன்றின் இயலளவை அதிகரிப்பதற்கோ அனுமதியளிக்கும் விதத்தில் 1985 இல் இவ்வொழுங்கு விதிகள் திருத்தப்பட்டன. எனினும் முன்னைய ஆண்டறிக்கை களில் மீண்டும் மீண்டும் குறிப்பிடப்பட்டவாறு தெங்கு பதனிடல் கைத்தொழில் பாவனைக்குதவாப் பழமைவாய்ந்த பொறித்தொகுதி மற்றும் உற்பத்தியில் காணப் படும் காலங் கடந்த தொழில்நுட்பம் என்பனவற்றினால் தொடர்ந்தும் பாதிக்கப் படுகின்றது. மற்றைய உண்ணத்தக்க பதிலீட்டு எண்ணெய்களிலிருந்தான கடுமை யான போட்டியைக் கருத்திற் கொண்டு உலக சந்தையில் போட்டியிடுவதை இயலச் செய்வதற்கு எமது தெங்கு உற்பத்திகளின் தரத்தினை உயர்த்துவது இன்றியமையாததாகும். இதனை அடைவதற்குத் தயாரிப்பாளர்களுக்கு ஊக்கு விப்புக்களைக் கொண்டதொரு திட்டத்தினை வழங்குவது அவசியமானதாகும்.

**சிறு ஏற்றுமதிப் பயிர்கள்**

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் கலப்புப் பயிர்களாக, பெரும்பாலும் வீட்டுத் தோட்டங்களாகப் பயிர் செய்யப்படுவதனால் பயிர் செய்யப்படும் பரப்பளவு அல்லது உற்பத்தி மீது கிடைக்கத்தக்கதாகவுள்ள தரவுகள் மிகச் சிறிதளவாகவே உள்ளன. ஆகவே இம் முக்கிய துறையின் செயலாற்றம் பற்றிய நேரடி மதிப்பீடு இயலாததொன்றாகவுள்ளது. எனவே இவ்வுற்பத்திகளின் மிகப் பெரும் பகுதியும் ஏற்றுமதி செய்யப்படுவதனால் உற்பத்தியின் போக்கினை உறுதிப்படுத்துவதற்கு அதற்குப் பதிலாக ஏற்றுமதி அளவுகளில் காணப்பட்ட மாற்றங்கள் பயன் படுத்தப்பட்டன.

ஏற்றுமதித் தரவுகளின் அடிப்படையில் கோப்பி, ஏலக்காய், எள்ளு, கொக்கோ தவிர்ந்த பெரும்பாலான சிறு ஏற்றுமதிப் பயிர்களினதும் உற்பத்தி 1985 இல் வீழ்ச்சியடைந்தது. மிளகு, கராம்பு, சாதிக்காய், வெற்றிலை, பாக்கு மற்றும் இன்றியமையாத எண்ணெய் என்பன கணிசமாக வீழ்ச்சியடைந்தன. மரக்கறிகள், பழ வகைகள் என்பவற்றின் ஏற்றுமதி அளவுகளும் கணிசமாக வீழ்ச்சியடைந்தன. கறுவா உற்பத்தி சிறிதளவாக வீழ்ச்சியடைந்த வேளையில் ஏனைய எண்ணெய் விதைகளின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி மிதமானதாக இருந்தது. எனினும் இவ்வுற்பத்திகளில் பெரும்பாலானவற்றிற்கான உள்நாட்டுக் கேள்வி நன்றாகவே இருந்தது.

எள்ளு விதைகளின் உற்பத்தி மூன்று மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்த வேளையில் கொக்கோ, ஏலக்காய் என்பனவற்றின் உற்பத்தி ஏறத்தாழ இரு மடங்காகியது. கோப்பி உற்பத்தி ஏறத்தாழ 43 சதவீதத்தினால் உயர்வடைந்தது. எனினும் இவ்வுற்பத்தி அதிகரிப்புக்களின் மதிப்பீடுகளில் சில முன்னைய ஆண்டின் தாழ்ந்த உற்பத்தி மட்டங்களுடன் ஒப்பிடத்தக்கவையே.

கோப்பி, கொக்கோ, ஏலக்காய் என்பனவற்றின் அதிகரித்த உற்பத்திக்கு இப் பண்டங்களுக்கான நல்ல விலைகளே முக்கிய காரணமாகும். 1985 இல் கவர்ச்சிகரமான கோப்பி விலைகள் நாட்டில் மிக நெடுந்தூரத்திலுள்ள பிரதேசங்களிலிருந்தும்கூட ஏற்றுமதிக்குப் பெருமளவு சேகரிப்புக்கள் கிடைத்ததை இயலச் செய்தது.

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் உதவித் திட்டத்தின்கீழ் கொக்கோ, கறுவா பயிரிடப்பட்ட புதிய நிலப்பரப்பு சிறிதளவால் அதிகரித்தது. இதற்கு மாறாக ஏலக்காய், கோப்பி, கராம்பு, மிளகு என்பனவற்றின் பரப்பு முறையே 47 சதவீதம், 5 சதவீதம், 33 சதவீதம், 14 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. இத்திட்டத்தின்கீழ் கொக்கோ, கறுவா, ஏலக்காய் ஆகியன மீள்நடுகை செய்யப்பட்ட பரப்பளவு கணிசமாக உயர்வடைந்தது. கொக்கோ மீள்நடுகை செய்யப்பட்ட பரப்பளவு எட்டு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்தவேளையில் கறுவா, கராம்பு என்பன மீள்நடுகை செய்யப்பட்ட பரப்பளவு இரண்டு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்தது.

மீள்நடுகை, புதிய பயிரிடுகை ஆகியவற்றிற்கான உதவுதொகைகள் போன்ற பல்வேறு பயிரிடுகை உதவுதொகைகள் அதிகரித்துச் செல்லும் செலவுகளைக் கருத்திற் கொள்கையில் கடந்த பல ஆண்டுகளாகப் பற்றுக்குறையான நிலமையையே கொண்டுள்ளன. இவ்வுதவுதொகைகளைப் பயன்படுத்துவதில் காணப்படும் குறைந்த ஈடுபாட்டிற்கு இதுவே காரணமாகும். 1986 இன் முற்பகுதியிலிருந்தும் உதவுதொகைகளை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் ஒழுங்குகள் இப் பயிர்களினது உற்பத்தியை உயர்த்துவதற்கு உதவும்.

இடையிடையே வெளியீட்டில் அதிகரிப்புக்கள் காணப்பட்டாலும் இப்பயிர்களின் பெரும்பாலானவற்றிற்கான பண்ணுட்டு விலைகள் உறுதியாக இருந்தபோதும் இப்பயிர்களின் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது. இவ்வீழ்ச்சிப் போக்கிற்கான ஏனைய காரணங்களிடையே இவை பெரும்பாலும் கலப்புப் பயிர்களாகப் பரந்தளவில் சிதறிக் காணப்படும் வீட்டுத் தோட்டங்களில் பயிர் செய்யப்படுவதும் ஒரு காரணமாகும். இது விரிவாக்கப் பணிகளுக்கான வசதிகளை வழங்குவதனைக் கடினமாக்குகின்றது. தரகர்களின் செல்வாக்கிற்குட்பட்ட சந்தைப்படுத்தல் வழிவகைகள் தாழ்ந்த உற்பத்தியாளர் விலைகளை ஏற்படுத்தியுள்ளன. இப்பயிர்கள் தொடர்பான ஆராய்ச்சி முயற்சிகளும் முக்கிய பெருந்தோட்டப் பயிர்கள், நெல் போன்றவற்றிற்கானவை மாதிரி பாராட்டத்தக்கனவாக இல்லை.

**நெல்**

1985 இல் நெல் உற்பத்தி 27 இலட்சம் மெற்றிக் தொன்களெனத் தற்காலிகமாக (1,280 இலட்சம் புசல் நெல் அல்லது 19 இலட்சம் மெற்றிக் தொன் அரிசி) மதிப்பிடப்பட்டது. 1984 இன் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் இது 10 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது.

1985 இன் நெல் உற்பத்தியில் ஏற்பட்ட முழு அதிகரிப்பும் 17.5 இலட்சம் மெற்றிக் தொன்களென மதிப்பிடப்பட்டுள்ள 1984/85 பெரும்போக அறுவடையிலிருந்தே கிடைத்தது. முன்னைய பெரும்போகத்தினைவிட 29 சதவீதம் கொண்ட இவ்வதிகரிப்பு பெறப்பட்டபோதும் வளமாக்கிப் பாவனையின் அளவில் வீழ்ச்சி காணப்பட்டது. முக்கிய உற்பத்திப் பிரதேசங்களில் காணப்பட்ட சாதகமான வானிலைநிலைமைகள், உயர்ந்தளவு தேறிய பரப்பளவு அறுவடை செய்யப்பட்டமை, எக்டேயர் ஒன்றிற்கான விளைவு அதிகரித்தமை ஆகியன இவ்வதிகரிப்பிற்குக் காரணங்களாகும். 1984/85 பெரும்போக காலத்தில் அறுவடை செய்யப்பட்ட

தேறிய பரப்பளவு 10 சதவீதத்தினுல் அதிகரித்தமை பயிர் இழப்புக்களின் குறைந்தளவு சந்தர்ப்பங்களை எடுத்துக் காட்டியது. எக்டேயர் ஒன்றிற்கான சராசரி விளைச்சல் 1984 இன் எக்டேயர் ஒன்றிற்கான 3,031 கிலோக்கிரும் களிலிருந்து 1985 இல் 3,498 கிலோக்கிரும்களுக்கு 15 சதவீதத்தினுல் அதிகரித்தது. இப்பருவகாலத்தில் எக்டேயர் ஒன்றிற்கான மிக உயர்ந்த விளைச்சலான 4,874 கிலோக்கிரும்கள் பொலநறுவை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டது. இம்மாவட்டத்தின் விளைச்சல் 1983/84 பெரும்போகத்தில் பெறப்பட்ட விளை வினைவிட 16 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மகாவலி ''எச்'' பிரதேசம் அடுத்து உயர்ந்த விளைவான எக்டேயர் ஒன்றிற்கான 4,760 கிலோக்கிரும்களைப் பதிவு செய்தது. இவ்வேளையில் உடவளவை அதனைத் தொடர்ந்து எக்டேயர் ஒன்றிற்கு 4,628 கிலோக்கிரும்களைப் பதிவு செய்தது. மேற்கு மற்றும் தென் மாகாணங்களில் பயிர்ச் சுழற்சியில் பொருத்தமற்ற காலப்பகுதியில் எதிர்பாராத மழை வீழ்ச்சி இல்லாதிருந்திருப்பின் மொத்த வெளியீடு உயர்வானதாக இருந் திருக்கும்.

1985 சிறுபோகத்தில் நெல் உற்பத்தி முன்னைய சிறுபோகத்தில் பதிவு செய்யப்பட்ட 10 இலட்சம் மெற்றிக் தொன் கொண்ட உற்பத்தியினைவிட 14 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. அதிகரித்த வளமாக்கிப் பாவனை, எக்டேயர் ஒன்றிற்கான சராசரி விளைச்சலில் அதிகரிப்பு என்பன காணப்பட்டபோதும் சிறுபோக அறுவடை 9.1 இலட்சம் மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு பருவத்தின் உச்ச காலத்தில் முக்கிய நெல் உற்பத்திப் பிரதேசங்களில் காணப் பட்ட சாதகமற்ற வானிலை நிலைமைகளின் விளைவாக குறைந்த பரப்பளவே விதைக்கப்பட்டு அறுவடை செய்யப்பட்டமையுமே முக்கியகாரணமாகும். கடந்த ஆண்டின் இதே பருவப் பகுதியுடன் ஒப்பிடுகையில் விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு 19 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்த வேளையில் அறுவடை செய்யப் பட்ட மொத்த நிலப்பரப்பும் 19 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. சிறுபோகத்தில் எக்டேயர் ஒன்றிற்கான விளைச்சல் 1984 இன் எக்டேயர் ஒன்றிற்கு 3,146 கிலோக்கிரும்களிலிருந்து 1985 இல் எக்டேயர் ஒன்றிற்கு 3,343 கிலோக்கிரும் களுக்கு 6 சதவீதத்தினுல் அதிகரித்தது. இதற்கு முன்னைய சிறுபோக காலத்தினை விட வளமாக்கிப் பயன்பாட்டில் 16 சதவீதம் கொண்ட அதிகரிப்புக் காணப் பட்டமையே முக்கிய காரணமாகும். பயிர்ச்செய்கையின் கீழான குறைந்த பரப்பளவிற்குப் பயன்படுத்தும்பொழுது பயிர் செய்யப்பட்ட நிலத்தின் அல கொன்றிற்கான வளமாக்கிப் பயன்பாட்டின் உள்ளீடு கணிசமாக அதிகரித்தது.

1985 இன் இரு பருவ காலங்களிலும் நெல் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பு 11 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. 19 சதவீதம் கொண்ட பெரும் வீழ்ச்சி சிறுபோக காலத்தில் பதிவு செய்யப்பட்ட வேளையில் பெரும் போகம் 6 சதவீத வீழ்ச்சியைக் கொண்டிருந்தது. 1984/85 பெரும்போகத்தில் விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி மழை மூலம் நீரைப் பெறும் பிரதேசங்களிலும் சிறு நீர்ப்பாசன பிரதேசங்களிலும் உயர்வானதாக விளங்கி முறையே 11 சதவீதம், 8 சதவீதங்களாகவும், பெரும் நீர்ப்பாசனப் பகுதிகளில் மிகச் சிறிதளவாகவும் காணப்பட்டது. 1985 சிறுபோகத்தில் விதைக் கப்பட்ட மொத்த நிலப்பரப்பில் ஏற்பட்ட 35 சதவீதம் கொண்ட பெரும் வீழ்ச்சி சிறு நீர்ப்பாசனப் பகுதிகளிலேயே காணப்பட்டது. பெரும் நீர்ப்பாசனப் பகுதிகளி லும், மழை நீரினை நம்பிய பகுதிகளிலும் விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு முறையே 15 சதவீதத்தினுலும், 13 சதவீதத்தினுலும் வீழ்ச்சியடைந்தன.

அட்டவணை 1.10

நெற்றுறையின் புள்ளி விபரங்கள் 1984—1985

| விடயம் | அலகு | 1984 பெரும் போகம் | 1984 சிறு போகம் | 1984 மொத்தம் | 1985(அ) பெரும் போகம் | 1985(அ) சிறு போகம் | 1985(அ) மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பளவு ... | '000எக்டேயர்கள் | 606 | 384 | 990 | 569 | 312 | 881 |
| வளமாக்கி வழங்கல்கள் | '000மெ.தொன்கள் | 112 | 59 | 171 | 84 | 69 | 153 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ. ப. இ. | 136 | 40 | 176 | 83 | 37 | 120 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த பரப்பளவு ... | '000எக்டேயர்கள் | 509 | 377 | 886 | 559 | 305 | 864 |
| எக்டேயருக்கான விளைச்சல் (இ) ... | கி. கிறும்கள் | 3,031 | 3,146 | 3,076 | 3,498 | 3,343 | 3,464 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய பரப்பளவு ... | '000எக்டேயர்கள் | 451 | 336 | 787 | 498 | 270 | 768 |
| உற்பத்தி ... | '000மெ.தொன்கள் ('000புசல்கள்) | 1,360 (65,154) | 1,060 (50,814) | 2,420 (115,968) | 1,751 (83,908) | 910 (43,607) | 2,661 (127,515) |
| உ.வி.தி. கீழ் கொள்வனவு செய்யப்பட்டவை(ஈ) ... | '000மெ.தொன்கள் | 115 | 54 | 169 | 9.4 | — | 101 |
| இறக்குமதிகள் (நெல்லிற்குச் சமன்) ... | '000மெ.தொன்கள் | — | — | 26 | — | — | 182 |

மூலங்கள்: குடிமதிப்பு புளளி விபரத்திணைக்களம்,
வேளாண்மைத் திணைக்களம்,
வேளாண்மை அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சு,
நெற் சந்தைப்படுத்தும் சபை,
தேசிய வளமாக்கிக் செயலகம்,
உணவு ஆணையாளர் திணைக்களம்.

(அ) தற்காலிகமானவை

(ஆ) பயிர்ச்செய்கை ஆண்டினதும் கலண்டர் ஆண்டினதும் வளமாக்கி வழங்கல்கள் அடிப்படையில் மாறுபட்டதாகும். பயிர்ச்செய்கை ஆண்டு பெரும்போகத்தையும் (செத்தெம்பர்/ஒற்றோபர்-மாச்சு/எப்பிறல்). சிறுபோகத்தையும் (எப்பிறல்/மே-ஒகத்து/செத்தெம்பர்) உள்ளடக்கும்.

(இ) பெரும்போக சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு, குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. அத்தரவுகள் பயிர் அறுவடை அளவீடுகள் அடிப்படையில் அமைந்தனவாகும். அதேவேளையில், மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் மொத்த விளைவு கணக்கிடப்படுகிறது.

(ஈ) ஒகத்திலிருந்து திசெம்பர் காலப்பகுதியில் சிறுபோக அறுவடை கொள்வனவு செய்தவேளையில் சனவரியிலிருந்து யூலை காலப்பகுதியில் பெரும்போக நெல் அறுவடை கொள்வனவு செய்யப்பட்டது.

1985 இல் அறுவடை செய்யப்பட்ட மொத்தப் பரப்பு 2 சதவீதத்தினால் சிறிதளவாக வீழ்ச்சியடைந்தது. 1984/85 பெரும்போக காலத்தில் அறுவடை செய்யப்பட்ட பரப்பு 10 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் 1985 சிறுபோகத்தில் அறுவடை செய்யப்பட்ட பரப்பளவு 19 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1984/1985 பெரும்போகத்தில் விதைக்கப்பட்ட மொத்த நிலப் பரப்பு, அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு என்பனவற்றின் மீதான தரவுகள் நீர்ப்பாசனப் பகுதிகள், அதே போன்று மழை நீரை நம்பிய பகுதிகள் இரண்டிலும் பயிர் இழப்புச் சந்தர்ப்பங்கள் மிகச் சிறிதளவாக இருந்தமையை எடுத்துக் காட்டின. இது கடந்த பெரும்போக காலத்தில் குறிப்பாகப் பெரும் நீர்ப்பாசனப் பகுதிகளிலும் மழை நீரை நம்பிய பகுதிகளிலும் சார்பு ரீதியில் பயிர் இழப்புக்கள் மிக உயர்வாக இருந்த சந்தர்ப்பத்துடன் ஒப்பிடத்தக்கதாகும்.

1985 இன் சிறுபோக காலத்தில் ஏற்பட்ட பயிர் இழப்புக்கள் கடந்த ஆண்டின் இதே பருவகாலத்தின் இழப்புக்களுடன் ஒப்பிடுகையில் சிறிதளவு உயர்வானதாக இருந்தது.

தேசிய வளமாக்கிச் செயலகத்தின்படி, 1985 இல் (கலண்டர் ஆண்டு) நெற்றுறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1984 இன் வழங்கல்களை விட 15,650 மெற்றிக் தொன்களால் அல்லது 10 சதவீதத்தினுல் அதிகரித்துள்ளன. இதற்கு அடுத்த பெரும்போக காலத்திற்காக ஆண்டின் இறுதிக் காலாண்டில் மேற் கொள்ளப்பட்ட அதிகரித்த வளமாக்கி வழங்கல்களே பெருமளவு காரணமாகும். பயிர்ச்செய்கை ஆண்டு அடிப்படையில், வேளாண்மை அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சினுல் வழங்கப்பட்ட தரவுகளின்படி 1985 காலப்பகுதியில் வளமாக்கிப் பயன்பாடு கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 18,391 மெற்றிக் தொன்கள் அல்லது 11 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. வளமாக்கிப் பாவனையில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சிக்கு 1984/85 பெரும்போக காலத்தில் வளமாக்கிப் பயன்பாடு குறை வடைந்தமையே முழுக் காரணமாகும். இப்பருவகாலத்தில் பயன்படுத்தப்பட்ட வளமாக்கியின் அளவு கடந்த ஆண்டின் இதே பருவகாலத்தில் பயன்படுத்தப் பட்டதைவிட 27,847 மெற்றிக் தொன்களினுல் அல்லது 25 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. விதைக்கப்பட்ட எக்டேயர் ஒன்றிற்காகப் பயன்படுத்தப்பட்ட வளமாக்கியின் சராசரி அளவும் 17 சதவீதம் கொண்ட வீழ்ச்சியை எடுத்துக் காட்டியது. எனினும் 1985 சிறுபோக காலத்தில் பயன்படுத்தப்பட்ட வளமாக்கி யின் அளவு 1984 இன் சிறுபோகத்தினைவிட 9,500 மெற்றிக் தொன்களினுல் அல்லது 16 சதவீதத்தினுல் அதிகரித்தது. 1985 சிறுபோக காலத்தில் விதைக்கப் பட்ட எக்டேயர் ஒன்றிற்குப் பயன்படுத்தப்பட்ட வளமாக்கியின் சராசரி அளவும் 47 சதவீதம் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது.

1985 இல் உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் நெற்சந்தைப்படுத்தும் சபையின் நெல் கொள்வனவு 40 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. கடந்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட போக்கின் தொடர்ச்சி யாகத் தனியார் துறையினுல் ஆற்றப்பட்ட சுறுசுறுப்பான பங்கு நெற்சந்தைப் படுத்தும் சபையின் நெற் கொள்வனவினை 101,000 மெற்றிக் தொன்களுக்கு மட்டும் குறைப்பதற்குக் காரணமாயிற்று. நெற்சந்தைப்படுத்தும் சபையின் கூடி யளவு கொள்வனவுகள் கணிசமாக உயர்ந்த பெரும்போக உற்பத்திகளிலிருந்தே மேற்கொள்ளப்பட்டது.

சிறுபோக காலப்பகுதியில் காணப்பட்ட சார்பு ரீதியில் தாழ்ந்த உற்பத்தியும் வடக்குக் கிழக்குப் பகுதிகளின் நெல் உற்பத்தி மாவட்டங்களில் சிலவற்றில் காணப்பட்ட குழப்ப நிலைமைகளும் நெற் சந்தைப்படுத்தும் சபையின் கொள் வனவுகளைக் குறைத்தன. வழமையான மாதிரிகளைத் தொடர்ந்து உலர் வலயத் தின் மிகை மாவட்டங்களான அம்பாறை (23,049 மெற்றிக் தொன்கள்), அநுராதபுரம் (14,673 மெற்றிக் தொன்கள்), பொலனறுவை (14,471 மெற்றிக் தொன்கள்), திருகோணமலை (11,430 மெற்றிக் தொன்கள்) ஆகிய மாவட்டங் களில் பெருந்தொகையான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டன. குழப்பநிலை காணப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்தான கொள்வனவுகள் 1984 இன் கொள்வனவான 25,054 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 415 மெற்றிக் தொன்களாக மட்டுமே காணப்பட்டன.

சிறுபோக காலத்தில் சிறு வீழ்ச்சி காணப்பட்டபோதும் 1985 இல் நெல் உற்பத்தி மட்டம் ஏறத்தாழ நாட்டின் அரிசி நுகர்வுத் தேவைகளின் அளவை அடைந்தது. மாதமொன்றிற்கு ஒரு ஆளுக்கு 100 கிலோக்கிரும் அரிசி என்ற அடிப்படையில் 1981–1982 நுகர்வோர் நிதியும் சமூக பொருளாதார அளவீட்டிலும் மதிப்பீடு செய்யப்பட்டவாறு மொத்த நுகர்வுத் தேவை 16 இலட்சம் மெற்றிக் தொன்களாகும். விரயம், விதை நெல் போன்ற தேவைகளுக்கு இடமளித்து நோக்கின் உற்பத்தி மட்டம் நாட்டின் அரிசி நுகர்வுத் தேவைகளை ஈடுசெய்யப் போதுமானதாக இருக்கிறது.

அரிசித் தேவையில் தன்னிறைவை அடைவதினுல் ஏற்படும் விளைவுகள் சிறந்த முறையில் சிந்திக்கப்பட வேண்டும். அல்லாவிடின் மிகையான உற்பத்தி உற்பத்தியாளர் விலைகளில் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடும். மேலும் அரிசி உற்பத்திக்கும் அரிசி நுகர்வுக்குமிடையேயான சமமற்ற நிலையைத் தவிர்ப்பதற்கு அரிசிக்கும் கோதுமை மாவிற்கும் பொருத்தமான விலைக் கொள்கையைத் தீர்மானிப்பதும் இன்றியமையாததாகும்.

**சிறு உணவு பயிர்கள்**

சிறு உணவுப் பயிர்களின் செயலாற்றம் 1984 ஆம் ஆண்டினைப் போன்றே 1985 இலும் குறைவாக இருந்தது. தற்காலிகத் தரவுகளின்படி 1984/85 பெரும்போகத்தில் உற்பத்தி பாதிக்கப்பட்டுப் பின்னடைந்தபோதும் 1985 இன் சிறுபோகத்தில் சில முன்னேற்றங்கள் காணப்பட்டன. பெரும்போக பருவகாலத்தில் பெரும்பாலான சிறு உணவுப் பயிர்களின் பயிர்ச் செய்கையின் கீழான பரப்பளவில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியே அப்பருவகாலத்தில் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பெருமளவு பொறுப்பாக இருந்தது. பயிர் செய்யப்பட்ட பரப்பளவில் குறைப்புக் காணப்பட்டபோதும் சாதகமான வானிலை நிலைமைகள், அதிகரித்த உற்பத்தியாற்றல் என்பனவற்றின் இணைந்த தாக்கம் காரணமாக மிளகாய், வெங்காயம், கடலை, உழுந்து என்பனவற்றின் உற்பத்தி அதிகரித்தது. உருளைக்கிழங்கிற்கான சாதகமான வானிலை, அதே போன்று சிறந்த விலைகள் என்பனவற்றின் காரணமாகப் பயிர்ச்செய்கையின் கீழான பரப்பளவு 44 சதவீதத்தினுல் அதிகரித்ததுடன் உற்பத்தியும் பெரும்போக காலத்தில் இரண்டு மடங்கிற்கும் கூடுதலாகியது. பெரும்போகத்தில் உருளைக்கிழங்கின் உயர்ந்த உற்பத்தி 1985 இன் சிறுபோகத்தில் உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கையின்கீழ் குறைந்தளவு நிலங்கள் கொண்டுவரப்பட்டமைக்குக் காரணமாயிற்று. இதன் விளைவாக உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கையின் கீழான பரப்பளவு 19 சதவீதத்தினுலும் உற்பத்தி 40 சதவீதத்தினுலும் வீழ்ச்சியடைந்தது. சிறுபோக காலத்தில் பயறு, தட்டைப் பயறு, எள்ளு போன்ற பல சிறு உணவுப் பயிர்களின் உற்பத்தி அதிகரிப்பு பெரும்போக காலத்தில் இப்பயிர்களின் உற்பத்தியில் ஏற்பட்ட இழப்பினை ஓரளவிற்கு ஈடுசெய்தது. உயர்ந்தளவு உள்நாட்டு விலைகளினுல் தூண்டப்பட்டமையால் சிறுபோகத்தில் பெருமளவு நிலங்கள் குறிப்பாகக் கலவேவா போன்ற பகுதிகளில் மிளகாய்ச் செய்கைக்காகப் பயன்படுத்தப்பட்டன. இதன் விளைவாக மிளகாய்ச் செய்கையின் கீழான பரப்பளவு 14 சதவீதத்தினுல் அதிகரித்தது.

1985 ஆம் ஆண்டுப் பகுதியில் சிறு உணவுப் பயிர்களின் உற்பத்தி பல காரணிகளின் பாதிப்புக்குட்பட்டது. நெற்செய்கைக்கு, குறிப்பாகப் பெரும்போக காலத்தில், அதிகரித்த நீர் கிடைத்தமை இப்பருவகாலத்தில் சிறு உணவுப் பயிர்ச்செய்கைக்காகக் கிடைக்கக்கூடியதான பரப்பளவைக் குறைத்ததுடன் கடந்த இரண்டு ஆண்டுகளில் இப்பயிர்களின் குறைவடைந்த உற்பத்தி இப்பயிர்களின் பயிர்ச்செய்கைக்கான விதைகளின் கிடைப்பனவையும் குறைத்தது. சோயா அவரை போன்ற பயிர்களின் உற்பத்தியில் காணப்பட்ட மிகத் தெளிவான வீழ்ச்சிக்குக் குறைந்த நுகர்வோர் கேள்வியே முக்கிய காரணமாகும். இப்பயிர்கள் சிலவற்றின் பயிர்ச்செய்கையின் கீழான பரப்பளவு குறைவடைந்தபோதும் சாதக மான வானிலை, அதிகரித்த வளமாக்கிப் பயன்பாடு என்பனவற்றின் முக்கிய காரணமாக அவற்றின் உற்பத்தியாற்றல் அதிகரித்துள்ளது.

நெற் சந்தைப்படுத்தும் சபையினுல் தொழிற்படுத்தப்படும் எட்டு சிறு உணவுப் பயிர்களுக்கான கீழ்மட்ட விலைத்திட்டம் கடந்த ஆண்டில் நிலவிய கீழ்மட்ட விலைகளுடன் இவ்வாண்டிலும் தொடர்ந்தது. கீழ்மட்ட விலைத்திட்டத்தின்கீழ் நெற்சந்தைப்படுத்தும் சபை 846 மெற்றிக் தொன் சோளத்தையும், 20 மெற்றிக் தொன் சோயா அவரையையும் கொள்வனவு செய்தது. இக்கொள்வனவுகள் கடந்த ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 3,152 மெற்றிக் தொன் சோளத் துடனும் 200 மெற்றிக் தொன் சோயா அவரையுடனும் ஒப்பிடத்தக்கதாகும்.

பொருளாதாரம் நெல் உற்பத்தியின் சுயதேவைப் பூர்த்தியின் தொடக்க நிலையில் இருப்பதனைக் கருத்திற் கொண்டு பயிர் பன்முகப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம் மிக அவசியமானதொன்ருக மாறியுள்ளது. இவற்றின் பயிர்ச்செய்கை வேளாண்மையாளர்களின் வருவாயை அதிகரிப்பது மட்டுமன்றி ஊட்டச்சத்தின் மட்டத்தை உயர்த்துவதற்கும் உதவும்.

சிறு உணவுப் பயிர்கள் துறையின் செயலாற்றம் பல காரணிகளினுல் தடை செய்யப்பட்டுள்ளது. உயர் விளைச்சல் தரும் இனங்களின் ஆராய்ச்சியிலும் அபிவிருத்தியிலும் குறைந்த கவனமே செலுத்தப்பட்டுள்ளது. வளமாக்கிப் பயன் பாடு குறைவாக இருந்ததுடன் சில குறிப்பிட்ட பயிர்களைப் பொறுத்தவரை வளமாக்கிப் பயன்பாடு ஒருபோதுமே காணப்படவில்லை. குறிப்பிட்ட சில நெடுந் தூர இடங்களில் உற்பத்தியாளர் குறைந்த விலைகளைப் பெறுகின்றமையினுல் சந்தைப்படுத்தலும் பின்னடைவினை ஏற்படுத்துகின்றது. நிறுவனக் கொடுகடனுக் கான வழிவகைகளும் விரிவாக்கப் பணிகளும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றமையும் இத்துறையில் முழுமையான உற்பத்தி உள்ளார்ந்த வளத்தினைப் பெற்றுக்கொள் வதனைத் தடை செய்கின்றது. மீளாய்விற்குரிய ஆண்டில் இவ்வுற்பத்திகளின் உற்பத்தியாற்றலை அதிகரிப்பதிலும் சந்தைப்படுத்தலை முன்னேற்றுவதிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

**சீனி**

1985 இல் இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபன சீனி உற்பத்தி (உணவு ஆணையாளரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கழிவு சீனியிலிருந்தான உற்பத்தி தவிர) 17,717 மெற்றிக் தொன்களாக மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டின் குறைவடைந்திருந்த உற்பத்தியைவிட மேலும் 3 சதவீதம்வீழ்ச்சியுற்றுக் காணப்பட்டது. இங்குரானை தொழிற்சாலையின் சீனி உற்பத்தியானது 6 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றவேளையில் கந்தளாய் தொழிற்சாலையின் உற்பத்தி ஏறக்குறைய முன்னைய ஆண்டின் அதே மட்டத்திலேயே இருந்தது.

இங்குராணைத் தொழிற்சாலையினல் முகாமைப்படுத்தப்பட்ட கரும்புப் பயிர்ச் செய்கையின் கீழ் உள்ள நிலப்பரப்பு (நாட்டப்பட்டதும் முளைவிட்டதும்) 16 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 1984 இன் 2,629 எக்டேயர்களிலிருந்து 1985 இல் 2,196 எக்டேயர்களாக விளங்கியது. அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு பயிர்ச்செய்கைக்குட்பட்ட நிலப்பரப்பின் சதவீதமாக முன்னைய ஆண்டின் 94 சதவீதத்திற்கு எதிராக 98 சதவீதமாக விளங்கியது. எனினும் எக்டேயர் ஒன்றுக்கான சராசரி விளைச்சல் 14 சதவீதத்தால் குறைவடைந்ததுடன், அறுவடை செய்யப்பட்ட கரும்பின் மொத்த அளவு 26 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 92,671 மெற்றிக் தொன்களாக விளங்கியது. கந்தளாய் தொழிற்சாலையினல் முகாமைப்படுத்தப்பட்ட, சீனிப் பயிர்ச்செய்கைக்கு உட்பட்ட நிலப்பரப்பு 11 சதவீதத்தால் அதிகரித்து 1984 இன் 2,377 எக்டேயர்களிலிருந்து 1985 இல் 2,594 எக்டேயர்களாக விளங்கியது. அறுவடை செய்யப்பட்ட பரப்பளவு பயிர்ச் செய்கைக்குட்படுத்தப்பட்ட நிலப்பரப்பின் சதவீதமான முன்னைய ஆண்டின் 95 சதவீதத்திற்கு எதிராக 1985 இல் 91 சதவீதமாகவிருந்தது. எக்டேயருக்கான சராசரி விளைச்சல் 4 சதவீதத்தினல் வீழ்ச்சியுற்றபோதிலும், பெருமளவு நிலப்பரப்பானது பயிர்ச்செய்கைக்குட்படுத்தப்பட்டதனல் அறுவடை செய்யப்பட்ட கரும்பின் அளவு சிறிதளவால் 95,843 மெற்றிக் தொன்களாக அதிகரித்தது.

மீளாய்வின் கீழான ஆண்டில் தனியார் துறை உற்பத்தியாளர், அரச துறையுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவுக்குச் சிறப்பாகச் செயலாற்றியிருந்தனர். தனியார்துறை உற்பத்தியாளர்களினல் வழங்கல் செய்யப்பட்ட கரும்பின் அளவு 75 சதவீதத்தால் அதிகரித்து 1984 இன் 46,029 மெற்றிக் தொன்களிலிருந்து 1985 இல் 80,652 மெற்றிக் தொன்களாக விளங்கியது. ஏறக்குறையத் தனியார்துறை உற்பத்தியின் முழுமையுமே இங்குராணைத் தொழிற்சாலையினல் கொள்வனவு செய்யப்பட்டது. மொத்தக் கரும்பு அறுவடையில் தனியார் துறையின் பங்கானது 1984 இன் 27 சதவீதத்திலிருந்து 1985 இல் 46 சதவீதத்திற்கு உயர்வடைந்திருந்தது. கந்தளாய் தொழிற்சாலைக்குத் தனியார் துறையின் கரும்பின் வழங்கல் தொடர்ந்தும் மிகச் சிறிதளவாகக் காணப்பட்டது.

சீனி பெறப்படும் வீதங்கள் இரண்டு தொழிற்சாலைகளிலும் 1985 இலும்கூட வீழ்ச்சியடைந்திருந்தது. கடந்த காலத்தின் போக்கினைப் போன்றே இங்குரான தொழிற்சாலை குறைவான சீனி பெறப்படும் வீதத்தினைப் பெற்று, 1984 இன் 6.4 சதவீதத்திலிருந்து 1985 இல் 5.9 சதவீதமாக மேலும் வீழ்ச்சியடைந்தது. கந்தளாய் தொழிற்சாலையின் சீனி பெறப்படும் வீதம் 1984 இன் 7.8 சதவீதத்திலிருந்து 1985 இல் 6.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

அரசதுறைத் தொழிற்சாலைகள் இரண்டினதும், குறைவான செயலாற்றம் பல்வேறு காரணிகளின் இணைந்த விளைவின் காரணமாக ஏற்பட்டதாகும். உரிய நேரத்தில் தொழிலாளர்களைப் பெறுவதில் உள்ள பிரச்சினைகளினல் பயிர்நடுகை, அறுவடை செய்யப்படும் காலங்களில் போதியதற்ற எண்ணிக்கையானேர் தொழிலில் அமர்த்தப்படுவதனல் இவ்விரு தொழிற்சாலைகளிலும் மிகப் பெரிய பிரச்சினைகள் தோற்றுவிக்கப்பட்டன. அண்மைக்காலத்தில் இனக்கலவரங்களால் இப்பிரச்சினையானது மேலும் மோசமடைந்தது. கந்தளாய் கரும்புப் பயிர்ச்செய்கை குறிப்பாக நோக்கின் அடிக்கடி விலங்குகளினல் ஏற்படுத்தப்படும் அழிவுகளினல் பாதிப்படைந்தது. இங்குராணை பயிர்ச்செய்கையானது நீர் தேங்கி நிற்கும் நிலைமைகளினல் பாதிக்கப்பட்டதுடன், இது இத்தொழிற்சாலையின் சார்பு ரீதியில் குறை

வான சீனி பெறப்படும் வீதத்திற்கும் குறிப்பிடத்தக்களவிற்குக் காரணமாக இருந்தது. இவ்விரண்டு தொழிற்சாலைகளிலும் குறைவான சீனி பெறப்படும் வீதமானது அறுவடையில் ஏற்படும் தாமதங்களினாலும் ஏற்பட்டது. இவை தொழிலாளர் பற்றாக்குறையினாலும் போக்குவரத்துப் பிரச்சினைகளினாலுமே ஏற்பட்டிருந்தன. கரும்பானது தொழிற்சாலைகளுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரும் பொறித்தொகுதியில் காணப்பட்ட இயக்கமின்மை போன்றவற்றினால் தயாரிப்புத் தொழிலில் தாமதங்கள் ஏற்படுகின்றமையினால் சீனி பெறப்படும் வீதங்களில் மேலும் குறைவடையும் போக்குகள் காணப்பட்டன. பற்றாக்குறையான நிதி நிலைமைகளினால் உதிரிப்பாகம் வழங்கலில் உள்ள கட்டுப்பாடுகள் பொறித்தொகுதியின் பேணல் நடவடிக்கைகளில் சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. குறைந்த விலையினால் தோன்றிய தொழிற்பாட்டிலுள்ள பொறித் தொகுதியின் குறைப் பயன்பாட்டு இயலளவும் குறைந்த கரும்பு வழங்கலும் மேலும் குறைவான உற்பத்திக்கு காரணங்களாக இருக்கின்றன.

அரசுடைமையாக்கப்பட்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் செவனகலவில் உருவாக்கப்பட்ட புதிய தொழிற்சாலையானது தனது முழு இயலளவின்படி 1985 யூலையில் 27,000 மெற்றிக் தொன்களை உற்பத்தி செய்யத் தொடங்கும் என எதிர்பார்த்து அட்டவணைப்படுத்தப்பட்ட போதிலும் ஒப்பந்தக்காரரின் மெதுவான செயலாற்றத்தினால் அதன் நிறைவேற்றுதலானது தாமதப்பட்டது. தொழிற்சாலையானது 1986 இல் தமது உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தொழிற்சாலை தொழிற்படும் நிலைக்கு வந்த பின்னரும்கூட, அரசதுறையின் சீனி உற்பத்தியானது ஆண்டிற்கான உள்ளூர் நுகர்வுத் தேவைகளில் 20 சதவீதம் வரையிலானவற்றை மட்டுமே ஈடுசெய்யக் கூடியதாக இருக்கும்.

சீனி உற்பத்தியில் வெளிநாட்டுத் தனியார் துறையின் பங்குபற்றுதலை ஊக்குவிக்கும் அரசாங்கத்தின் ஆர்வத்திற்கு ஓரளவுக்குச் சாதகமான ஆதரவு கிடைத்துள்ளது. பெல்வத்தை சீனிக் கூட்டு நிலையத்தை இங்கிலாந்தின் பன்னாட்டு பூக்கர்ஸ் நிறுவனம் முகாமைப்படுத்துவதன் மூலமும், மொனராகலை சீனிக் கூட்டு நிலையத்தைப் பெர்முடாவின் பன்னாட்டு மெகரா நிறுவனம் வழிநடத்துவதன் மூலமும் இந்த முயற்சியில் ஏற்கனவே தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளன. பெல்வத்த சீனிக்கூட்டு நிலையமானது 1986 இன் பிற்பகுதியில் 15,000 மெற்றிக் தொன்களை உற்பத்தி செய்யும் எனவும் 1989 இல் தமது முழு இயலளவான 47,000 மெற்றிக் தொன்களை உற்பத்தி செய்யும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. 1988 ஆம் ஆண்டு உற்பத்தியைத் தொடங்கும் மொனராகலை சீனிக்கூட்டு நிலையமானது 43,000 மெற்றிக் தொன் உற்பத்தி இயலளவினைக் கொண்டிருந்தது. இந்த இரண்டு கூட்டு நிலையங்களும், கந்தளாய், இங்குரானை, செவனகல ஆகிய அரசு உடைமையாக்கப்பட்ட தொழிற்சாலைகளுடன் சேர்ந்து 142,000 மெற்றிக் தொன் சீனியை அல்லது 1,990 ஆம் ஆண்டளவில் ஆண்டுக்கான தேவையில் 56 சதவீதத்தை உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தனியார் கரும்பு உற்பத்தியாளர்களும், அல்லது செயற்றிட்டங்களுக்கு வெளியிலான கரும்பு வளர்ப்போரும் எந்தளவுக்கு நன்மை பெறுகிறார்கள் என்பது, இச்செயற்றிட்டங்களைக் குறிப்பிடத்தக்க எல்லைக்கு அப்பால் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுவதிலேயே பெரிதும் தங்கியுள்ளது. உற்பத்தியாளர்களுக்கு இச்செயற்றிட்டங்களின் கீழ் விலை ஊக்குவிப்புக்கள், அத்தியாவசிய உள்ளீடுகளுக்கான வழிவகைகள் போன்ற எதிர்பார்ப்புக்கள் கிடைக்கக் கூடியதாகவிருந்தால் தனியார் கரும்பு உற்பத்தியாளர் பங்களிப்பினை வழங்கக்கூடிய ஒரு நிலையினைப் பெறுவார்கள். இந்த நிறுவனங்கள் ஒரு நிலையான சந்தையினைக் கொண்டிருப்பதற்கு உள்ளூர் விலைகள் பன்னாட்டு விலைகளைவிட அதிகரிப்பு அடையாமல் இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

**மீனும் கால்நடையும்**

1985 இன் மீன் உற்பத்தியானது 168,040 மெற்றிக் தொன்களாகும் என தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டினது குறைவடைந்த உற்பத்தியைவிட இச் சிறிதளவு அதிகரிப்பானது கரையோர, ஆழ்கடல் மீன்பிடித் துறைகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக ஏற்பட்டதாகும். கரையோர மீன் உற்பத்தியானது மொத்த மீன்பிடியில் 80 சதவீதத்திற்கு வகைகூறிச் சிறிதளவால் அதிகரித்த வேளையில் உள்நாட்டு நன்னீர் மீன்பிடித்துறை உற்பத்திகள் ஏறக்குறைய முன்னைய ஆண்டினது அதே மட்டத்தில் நிலைத்திருந்தது. மொத்த மீன் வெளியீட்டில் சார்புரீதியில் 1 சதவீதத்தினை மட்டுமே கொண்டிருந்த கரைகடந்த ஆழ் கடல் மீன் உற்பத்தி ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்குகளினால் அதிகரித்திருந்தது.

கடற்றொழிற்றுறையானது 1983 வரை சிறந்த செயலாற்றத்தினைப் பெற்றிருந்தபோதும் பின்னர் கடுமையான பின்னடைவினால் பாதிக்கப்பட்டது. குறிப்பாக மொத்த மீன்பிடியில் கணிசமான நிரம்பலினை வழங்கும் வடக்குக் கிழக்குப் பகுதிகளின் கரையோர மீன்பிடியானது இப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள பாதுகாப்புப் பிரச்சினைகளினால் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டிருந்தது. கரைகடந்த ஆழ் கடல் மீன்பிடித்துறைகளின் முன்னேற்றத்திற்கு இவ்வாண்டில் அபுதாபி நிதிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நீர்க்கலங்களின் வழங்கல்கள் அறிமுகப்படுத்தப்பட்டதே முக்கியமான காரணமாகும். வெளிநாட்டு நிதி உதவிகளுடனான பல்வேறு மீன்பிடி அபிவிருத்திச் செயற்றிட்டங்களை செய்முறைப்படுதல் 1985 ஆம் ஆண்டுக் காலத்திலும் தொடர்ந்தும் நடைபெற்றது.

கடற்றொழிற்றுறைக்குப் பொறிமயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட உதவித்தொகையின் மொத்த அளவு 1984 இன் ரூ. 140 இலட்சங்களிலிருந்து 1985 இன் வரவு செலவுத்திட்ட ஒதுக்குதலில் ஏற்பட்ட குறைப்பின் விளைவாக ரூ. 111 இலட்சத்திற்கு வீழ்ச்சியுற்றது. உள்ளூர் மீன்பிடித் துறைக்கு நீர்க்கலங்கள், குளங்களுக்கான உதவு தொகை வடிவில் வழங்கப்பட்ட உதவுதொகையின் மொத்த அளவு ரூ. 27 இலட்சமாக விளங்கியது.

மீன்பிடித்துறையின் குறைவான செயலாற்றமானது இவ்வாண்டில் கருவாடு உட்பட எல்லா வகை மீன்களின் விலைகளும் அதிகரித்துக் காணப்பட ஏதுவாயிற்று. அறக்குளா போன்ற சில வகை இன மீன்களின் விலைகள் சாதாரண நுகர்வோர் கொள்வனவு செய்யமுடியாத அளவுக்கு உயர்ந்திருந்தன. வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தீர்க்கப்படாத பிரச்சினைகள் நீங்கி சுமுக நிலைமைக்குத் திரும்பும்வரை இந்த நிலைமைகளில் முன்னேற்றம் காணமுடிவது சாத்தியமல்ல. கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகூட அவர்களுடைய 1965 இல் கொள்வனவு செய்யப்பட்ட இழுவைப் படகுகள் பாவிக்க முடியாத நிலைமையினால் பாதிக்கப்பட்டிருந்தன.

இலங்கையர்களின் உணவில் மீன் முக்கியமான விடயமாக அமைந்திருப்பதால் அதிகரித்த மீன் உற்பத்திக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. போதியளவு ஊக்குவிப்புக்களின் மூலம் கரையோர மீன்பிடித் துறையைப் பொறிமயப்படுத்தலினை ஊக்குவிக்கும் வேளையில் கரை கடந்த ஆழ் கடல் மீன்பிடித்துறைகளுக்கும் குறிப்பிடத்தக்க முன்னுரிமை தேவைப்படுகின்றது. மீன் உற்பத்தி மதிப்பீடுகளின் சான்றுகளின்படி இத்துறையில் வளங்கள் போதியளவுக்குப் பயன்படுத்தப்படவில்லை. நன்கமைந்த ஒரு தனியார் துறை எந்தவொரு துணிகர முயற்சிகளையும் மேற்கொள்ளாத ஒரு துறையாக இது விளங்குவது ஓரளவு ஏமாற்றமளிப்பதாக இருப்பதுடன் அவர்களின் பங்களிப்பு வெளிநாட்டு முயற்சியுடனோ அல்லது கூட்டின்றியோ நடுத்தர அல்லது பெரிய அளவு இழுவைப் படகுகளைக் கொள்வனவு செய்வதற்கான கொடுகடன் போன்ற போதுமானளவு ஊக்குவிப்புக்களின் கீழ் உற்சாகப்படுத்தப்பட வேண்டும். கரைகடந்த ஆழ் கடல் மீன்பிடித்துறை நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் பயன் மிக்க பங்களிப்பினை வழங்கத்தக்க விதத்தில் தூண்டப்படலாம்.

1985 இன் பால் உற்பத்தி எருமைப்பால் உட்பட 3340 இலட்சம் இலிற்றர்கள் எனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டினைவிட 2 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பைக் காட்டியது. தேசிய பாற்சபை 670 இலட்சம் இலிற்றர் பாலைச் சேகரித்ததுடன் இது 1984 இல் சேகரிக்கப்பட்ட அளவினைவிட 16 சதவீதம் உயர்வானதாகவும் இருந்தது. உயர்ந்த சேகரிப்பிற்குக் கடந்த ஆண்டின் பிற்பகுதியில் தேசிய பாற்சபையினுல் பாலின் உற்பத்தியாளர் விலை இலிற்றர் ஒன்றுக்கு 50 சதத்தினுல் உயர்த்தப்பட்டமையும், பால் சேகரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டமையும் முக்கிய காரணங்களாகும். தேசிய பாற்சபையின் கிருமி நீக்கப்பட்ட பால், சூடாக்கித் துப்பரவு செய்யப்பட்ட பால் ஆகியவற்றின் உற்பத்தி முறையே 9 சதவீதத்தாலும், 15 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தது. அதிகரித்த பால் சேகரிப்பு காரணமாக முழு ஆடைப்பால் மா உற்பத்தியும் 32 சதவீதத்தினுல் அதிகரித்தது.

சிறப்பு அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதனூடாக நாட்டின் கால்நடைக் கைத்தொழிலை முன்னேற்றுவதற்கான முயற்சிகள் 1985 இலும் தொடர்ந்தன. இச் செயற்றிட்டங்கள் கோழிப்பண்ணை அபிவிருத்திக்கான ''சிடா' செயற்றிட்டம், இலங்கை—நெதர்லாந்து கோழிப்பண்ணை செயற்றிட்டம், இலங்கை—மேற்கு சேர்மனி ஆட்டு வளர்ப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம், இலங்கை—சுவிற்சர்லாந்து கால்நடை அபிவிருத்தி செயற்றிட்டம், இலங்கை—ஆசிய அபிவிருத்தி வங்கி கால்நடை அபிவிருத்திச் செயற்றிட்டம் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கின்றது.

1985 இல் மொத்த முட்டை உற்பத்தி 6120 இலட்சங்கள் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இது 1984 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9 சதவீதம் கொண்ட அதிகரிப்பைக் கொண்டிருந்தது.

**கிராமியக் கொடுகடன்**

கிராமியக் கொடுகடன் அமைப்பைப் பொறுத்தவரையில் 1985 ஆம் ஆண்டு பல மேம்பாட்டுப் பண்புகளைக் கொண்டதாய் அமைந்திருந்தது. மத்திய வங்கி நான்கு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளை அமைத்தது. இதன் மூன்றாவது பிரதேச அலுவலகத்தை மாத்தளையில் நிறுவியது. வர்த்தக வங்கிகளின் கிராமியப் பிரிவுக்கான கொடுகடன் வழங்குதலுக்கு உதவி செய்யும் நோக்குடன் ரூ. 3,000 இலட்சம் கொண்ட கொடுகடன் உத்தரவாத நிதி ஒன்றினைத் தொடக்கி வைத்தது. இத்துடன் வேளாண்மையல்லா நடவடிக்கைகட்கான கொடுகடன் வழங்கல் அளவினை விரிவாக்கவும் தொடர்ந்து உதவியது.

மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட இன்னுமொரு முக்கிய நடவடிக்கை யாதெனில் 1973 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறையில் இருந்த அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தை மீள நடைமுறைப்படுத்திய தாகும். 1986 ஆம் ஆண்டில் பல திருத்தங்கள் நடைமுறைக்கு வரும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

அரசுக்குச் சொந்தமான தேசிய சேமிப்பு வங்கியினால் 1985 யூன் மாதத்தில் தொடக்கி வைக்கப்பட்ட வேளாண்மைக் கொடுகடன் நடவடிக்கைகள் இலங்கை வேளாண்மைக் கொடுகடன் ஏற்பாட்டில் ஓர் புதிய அபிவிருத்தியாகும். இதுவரை தேசிய சேமிப்பு வங்கி ஒரு சேமிப்பு வங்கியாக மட்டுமே இயங்கி வந்தது. அது இப்போது சேமிப்புக்கும் கிராமியக் கொடுகடனுக்கும் இடையே ஓர் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்த முயற்சி செய்கின்றது.

முன்னைய ஆண்டுகளைப் போலவே மூன்று உள்ளூர் வர்த்தக வங்கிகளான மக்கள் வங்கி, இலங்கை வங்கி, அட்டன் நாசனல் வங்கி என்பனவும் ஒரு வெளிநாட்டு வங்கியான இந்தியன் ஓவசீஸ் வங்கியும் கிராமியத் துறைக்குக் கொடுகடன் வழங்குவதில் தொடர்ந்தும் முக்கிய பங்கினை வகித்து வந்தன. 1985 ஒகத்து தொடக்கம் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளும் கிராமிய துறையில் மிகச் சிறிய அளவில் கடன் நடவடிக்கைகளைத் தொடங்கின. இந் நிறுவனங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ்க் குறுங்கால வேளாண்மைக் கொடுகடனை வழங்குவதற்கு மட்டுமன்றி, முக்கியமாகக் கிராமிய குடித்தொகையில் வசதி குறைந்த பிரிவினருக்கு, கிராமியத் துறையில் முதலீட்டுக் கொடுகடன் தேவைகட்கான நடுத்தர, நீண்டகால கொடுகடன்களை வழங்குவதற்குமாகவே திட்டமிட்டுள்ளன.

அட்டவணை 1.11 இல் காட்டப்பட்டுள்ளவாறு அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் இரு அரச வங்கிகளினாலும், அட்டன் நசனல் வங்கியாலும், வழங்கப்பட்ட பயிர்ச்செய்கைக் கடன்களின் மொத்தத் தொகை முன்னைய ஆண்டின் ரூ. 2,117 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1984/85 பயிர்ச்செய்கை ஆண்டுக் காலப்பகுதியில் ரூ. 1,566 இலட்சமாக விளங்கியது. முன்னைய பயிர்ச்செய்கை ஆண்டினைவிட 26 சதவீதம் கொண்ட இவ் வீழ்ச்சி மூன்று நிறுவனங்களினாலும் பகிர்ந்து கொள்ளப்பட்டது. ஆகக்கூடிய வீழ்ச்சி (37 சதவீதம்) மக்கள் வங்கியில் ஏற்பட்டவிடத்து, அட்டன் நசனல் வங்கி, இலங்கை வங்கி என்பவற்றில் முறையே 26 சதவீத, 11 சதவீத வீழ்ச்சி காணப் பட்டது. முன்னைய ஆண்டுகளில் பயிர்ச்செய்கைக் கடனின் பெரும் பங்குக்கு வகை கூறியிருந்த இலங்கை வங்கி, வங்கித்துறை வேளாண்மைக் கடன் வழங்கலில் பங்குபற்றத் தொடங்கிய 1967 ஆம் ஆண்டு தொடக்கம் முதற்றடவையாக

அட்டவணை 1.11

**அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின்கீழ் பயிர்செய்கைக்கு வழங்கப்பட்ட கொடுகடன்கள்**

*(1985 திசெம்பர் 31 இல் உள்ளபடி)*

ப. இ. ரூபாய்களில்

| காலப்/பகுதி | மக்கள் வங்கி | | | இலங்கை வங்கி | | | அட்டன் நசனல் வங்கி | | | மொத்தக் கடன்கள் | | கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ்வழங்கப் பட்ட மொத் தக்கடன்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | |
| பெரும் போகம் 1983/84 ... | 65.95 | 8.87 | 74.82 | 43.06 | 11.75 | 54.81 | 24.15 | 2.64 | 26.79 | 133.16 | 23.16 | 156.42 |
| சிறு போகம் 1984 | 21.59 | 5.10 | 26.69 | 14.37 | 7.48 | 21.85 | 3.30 | 3.39 | 6.69 | 39.20 | 15.97 | 55.23 |
| பயிர்ச்செய்கை ஆண்டு 1984 ... | 87.54 | 13.97 | 101.51 | 57.43 | 19.23 | 76.66 | 27.45 | 6.03 | 33.48 | 172.42 | 39.23 | 211.65 |
| பெரும் போகம் 1984/85 | 35.49 | 5.16 | 40.65 | 32.93 | 13.08 | 46.01 | 14.49 | 1.59 | 16.08 | 82.91 | 19.83 | 102.74 |
| சிறு போகம் 1985 | 17.55 | 5.74 | 23.29 | 14.09 | 8.02 | 22.11 | 5.15 | 3.43 | 8.58 | 36.79 | 17.19 | 53.98 |
| பயிர்ச்செய்கை ஆண்டு 1985(அ) | 53.04 | 10.90 | 63.94 | 17.02 | 21.10 | 68.12 | 19.64 | 5.02 | 24.66 | 119.79 | 37.02 | 156.72 |

(அ) தற்காலிகமானவை.

மூலங்கள்: மக்கள் வங்கி,
இலங்கை வங்கி,
அட்டன் நசனல் வங்கி.

இரண்டாவது உயர்ந்த இடத்தைப் பெற்றது. மக்கள் வங்கியினதும், இலங்கை வங்கியினதும் பங்குகள் முறையே 41 சதவீதமாயும், 43 சதவீதமாயும் விளங்கிய விடத்து அட்டன் நசனல் வங்கியினது பங்கு முன்னைய ஆண்டினைப்போலவே 16 சதவீதம் அளவிலேயே காணப்பட்டது. 1985 ஆம் ஆண்டில் அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ்ப் பகிர்ந்தளிக்கப்பட்ட கொடுகடன் தொகையில் ஏற்பட்ட வீழ்ச்சி, சாதகமற்ற காலநிலை வேளாண்மை யாளர்களின் கடன்களை மீளச் செலுத்தும் இயலளவைக் குறைத்தமையின் காரண மாக முன்னைய ஆண்டின் உயர்ந்த கடன் செலுத்தத் தவறிய விகிதத்தின் காலங் கடந்த தாக்கமாகும். இது மக்கள் வங்கியைப் பொறுத்தவரை குறிப்பாக உண்மையாக உள்ளது.

1985 பயிர்ச்செய்கையாண்டில் நெற்பயிர்ச் செய்கைக்குப் பகிர்ந்தளிக்கப் பட்ட மொத்தக் கடன்களின் அளவு ரூ. 1,197 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 31 சதவீதம் குறைவானதாகக் காணப்பட்டது. அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடனின் மொத்தத் தொகையில் நெல்லுக்கான கடன்கள் 76 சதவீதத்திற்கு வகை கூறியது. முன்னைய ஆண்டின் தொடர்பான பங்கு 81 சதவீதமாகும். நெற்றுறைக்கு மக்கள் வங்கியால் வழங்கப்பட்ட ரூ. 530 இலட்சம் கொண்ட தொகை, மொத்த நெற்பயிர்ச் செய்கைக் கடன் களில் 44 சதவீதத்திற்கு வகை கூறியவிடத்து இது முன்னைய ஆண்டின் பங்கான 51 சதவீதத்தினைவிட குறைவாகவே காணப்பட்டது. அனைத்தையும் உள்ளடக் கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின்கீழ் இலங்கை வங்கியால் பகிர்ந்தளிக்கப் பட்ட மொத்த நெற்கடன்களின் பங்கு முன்னைய ஆண்டின் 33 சதவீதத்திலிருந்து 39 சதவீதத்திற்கு அதிகரித்தபோதும் வங்கியால் நெற்பயிர்ச்செய்கைக்கு வழங்கப் பட்ட கடன்களின் மொத்தத் தொகை 18 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து காணப் பட்டது.

பெரும்போக காலத்தில் நெற்பயிர்ச் செய்கைக்காக வழங்கப்பட்ட கடன்கள் ரூ. 829 இலட்சமாக விளங்கி ஆண்டுக் காலப்பகுதியில் அனைத்தையும் உள்ளடக் கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மொத்த நெற்கடன் தொகையில் 69 சதவீதத்திற்கு வகை கூறியது. முன்னைய பயிர்ச்செய்கையாண்டின் தொடர்பான பங்கு 77 சதவீதமாக இருந்தது. மக்கள் வங்கி மொத்த பெரும் போக நெற்கடன்களில் ரூ. 355 இலட்சத்தை அல்லது 43 சதவீதத்தைக் கடனாக வழங்கியது. இத்தொகை முன்னைய ஆண்டின் தொடர்பான பயிர்ச்செய்கைக் காலப்பகுதியினதைவிட 46 சதவீதம் குறைவானதாகும். ஆண்டுக் காலப்பகுதியில் அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின்கீழ் இலங்கை வங்கியின் பெரும்போக நெற்கடன்களின் பங்கு 40 சதவீதமாக விளங்கி, முன்னைய பெரும்போக காலத்தின் 32 சதவீதத்தைவிட மேம்பட்டுக் காணப்பட்டது. 1983/84 பெரும்போக காலத்தினுடன் ஒப்பிடுகையில் இலங்கை வங்கியால் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் அளவு ரூ. 101 இலட்சம் (அல்லது 23 சதவீதம்) குறைவானதாகக் காணப்பட்டது. அட்டன் நசனல் வங்கியும் பெரும்போக காலத்தில் நெற் கடன்களில் வீழ்ச்சியினையே காட்டியது. எனினும் அதன் ஒப்பீட் டுப் பங்கு குறிப்பிடத்தக்களவுக்கு வீழ்ச்சியடையவில்லை. 1985 சிறுபோகத்தில் வழங்கப்பட்ட நெற் கடன்களின் மொத்தத் தொகை ரூ. 368 இலட்சமாக விளங்கி 1984 சிறுபோகத்தினதைவிட 6 சதவீதம் குறைவானதாகக் காணப் பட்டது. மக்கள் வங்கியால் அடையப்பட்ட வீழ்ச்சியே இக்காலப்பகுதியில் குறைந்த அளவு கொடுகடனுக்குப் பொறுப்பாகக் காணப்பட்டது. எனினும் அட்டன் நசனல் வங்கி இதே காலப்பகுதியில் அதன் கொடுகடன் அளவில் அதிகரிப்பைக் காட்டியது.

அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் சிறு உணவுப் பயிர்களுக்கு வழங்கப்பட்ட மொத்தக் கடன்களின் அளவு 1984 இன் ரூ. 392 இலட்சத்திலிருந்து 6 சதவீதத்தால் 1985 இல் ரூ. 370 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இத் தேவைக்காக மக்கள் வங்கியால் வழங்கப்பட்ட கடன்கள் ரூ. 109 இலட்சமாக விளங்கி முன்னைய பயிர்ச்செய்கை ஆண்டுடன் ஒப்பிடுகையில் 22 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. அட்டன் நசனல் வங்கியும் தனது சிறு உணவுப் பயிர்கட்கான கொடுகடனில் வீழ்ச்சியினைக் காட்டியது. இதற்கு மாருக இலங்கை வங்கி, அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடு கடன் திட்டத்தின்கீழ் தனது சிறு உணவுப் பயிர்களுக்கான கடன் வழங்கலை 1984/85 ஆம் பயிர்ச்செய்கை ஆண்டினைவிட 10 சதவீதத்தால் ரூ. 210 இலட்சத்துக்கு அதிகரித்து இத்திட்டத்தின்கீழ் சிறு உணவுப் பயிர்களுக்கு வழங்கப் பட்ட மொத்தக் கடன்களில் 57 சதவீதத்திற்கு வகை கூறியது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களின் மீளப்பெறுகையில் 1985 ஆம் ஆண்டில் மேம்பாடு காணப்பட்டது. நெற்கடன்களின் மீளப்பெறுகை விகிதம் 1984 இல் 65 சதவீதத்திலிருந்து 1985 இல் 70 சதவீதமாக அதிகரித்துக் காணப்பட்டது. 1984/85 பெரும்போக காலத்தில் வழங்கப்பட்ட மொத்த நெற்கடன்களில் 1985 இறுதியில் 68 சதவீதம் மட்டும் மீளப் பெறப்பட்டவிடத்து 1983/84 பெரும்போக காலத்தில் வழங்கப்பட்ட கடன்களில் 1984 ஆம் ஆண்டு இறுதியில் 64 சதவீதம் மட்டுமே மீளப் பெறப்பட்டது. மறுபக்கத்தில் சிறு உணவுப் பயிர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் மீளப்பெறுகை வீதம் 1984 ஆம் ஆண்டின் 64 சதவீதத்திலிருந்து 1985 ஆம் ஆண்டில் 60 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத் தின்கீழ் வழங்கப்பட்ட எல்லாக் கடன்களினதும் மொத்த மீளப்பெறுகை நிலை 1984 ஆம் ஆண்டில் 53 சதவீதத்திலிருந்து 1985 ஆம் ஆண்டில் 60 சதவீதமாக மேம்பாடடைந்து காணப்பட்டது.

1984 ஆம் ஆண்டைப்போலவே இலங்கை வங்கியால் மட்டும் செய்முறைப் படுத்தப்பட்ட நடைமுறையில் உள்ள பயிர்ச்செய்கை கடன்களின் மீள அட்ட வணைப்படுத்தல் திட்டத்தின் முன்னேற்றம் தொடர்ந்தும் குறைவாகவே காணப் பட்டது. 1985 ஆம் ஆண்டு இறுதியில் அமைச்சரவையின் பணிப்புக்கமைய மக்கள் வங்கி இத்திட்டத்தை 1986 இல் நடைமுறைப்படுத்துவதற்காக நட வடிக்கைகளை எடுத்தது.

முன்னைய ஆண்டுகளைப் போலவே கிராமிய துறையில் முதலீட்டு நோக்கங்கட் காக நிறுவன கொடுகடனை ஊக்குவிக்கும் பொருட்டு 1985 ஆம் ஆண்டில் பல புதிய கொடுகடன் திட்டங்கள் நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியின் கீழ் மத்திய வங்கி மீள் நிதியிடல் திட்டத்தின்கீழ் அறிமுகப்படுத்தப்பட்டன. அநுராத புரம், மாத்தறை பிரதேசங்களில் மத்திய வங்கியின் இரண்டு பிரதேச அலுவலகங் களும் கிராமிய அபிவிருத்தித் திட்டங்களினை ஊக்குவிக்கும் சிறப்புச் செயற்றிட்டங் களைத் தொடர்ந்தும் செயற்படுத்தின. 1985ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட மூன்ருவது பிரதேச அலுவலகமான மாத்தளை, இப்பகுதியில் நிறுவப்பட்டுள்ள கடன் வழங் கும் நிறுவனங்களினூடாக அதன் அதிகார எல்லைக்குள்வரும் அதேவகை நிகழ்ச்சித் திட்டங்களைப் பொறுப்பேற்றுக் கொள்ளும். தயாரிக்கப்பட்டுவரும் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய நோக்கம் யாதெனில், தொழிலற்றவர்களுக்கும் ஏனைய வசதி களற்ற மக்கட் பிரிவினருக்கும், கிராமப்புறங்களில் கிடைக்கத்தக்கனவாகவுள்ள திறமைகளையும், தொழில்நுட்ப வசதிகளையும் மூலப்பொருட்களையும் பயன்படுத்தி சுயதொழில் வாய்ப்பு வசதிகளைப் பெருமளவுக்கு ஏற்படுத்துவதேயாகும்.